இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100
1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 225 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – பங்குனி 13 – செவ்வாய்க்கிழமை 26 மார்ச் 2024 – கோவை ★ ★ 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 225 : Thiruvalluvar Year - 2055 - Panguni 13 - Tuesday 26 March 2024 - Kovai ★ ★ 8 Pages ₹ 5.00

### நாடாளுமன்றத் தேர்தல்: 'இந்தியா' கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தமிழ்நாடு முழுவதும்

# கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடர் பிரச்சாரம்!

## எட்டையபுரத்தில் (சிந்தலைக்கரை) இன்று மாபெரும் பொதுக்கூட்டத்தில் உரையாற்றுகிறார்!

2024 ஏப்ரல் 19 அன்று நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலையொட்டி, தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் **மு.க.ஸ்டாலின்** அவர்கள் தமிழ்நாடு முழுவதும் இந்தியா கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்குச் சேகரிக்கிறார்.

கழகத் தலைவர் அவர்கள் மேற்கொள்ளும் தேர்தல் பிரச்சார பயண விவரம் வருமாறு :-




| தேதி | நாடாளுமன்ற தொகுதி |
|---|---|
| **26.03.2024 (செவ்வாய்க்கிழமை)** | **தூத்துக்குடி இராமநாதபுரம்** |
| **27.03.2024 (புதன்கிழமை)** | **தென்காசி விருதுநகர்** |
| **29.03.2024 (வெள்ளிக்கிழமை)** | **தருமபுரி, கிருஷ்ணகிரி** |
| **30.03.2024 (சனிக்கிழமை)** | **சேலம், கள்ளக்குறிச்சி** |
| **31.03.2024 (ஞாயிற்றுக்கிழமை)** | **ஈரோடு நாமக்கல் கரூர்** |
| **02.04.2024 (செவ்வாய்க்கிழமை)** | **வேலூர், அரக்கோணம்** |
| **03.04.2024 (புதன்கிழமை)** | **திருவண்ணாமலை ஆரணி** |
| **05.04.2024 (வெள்ளிக்கிழமை)** | **கடலூர், விழுப்புரம்** |
| **06.04.2024 (சனிக்கிழமை)** | **சிதம்பரம், மயிலாடுதுறை** |
| **07.04.2024 (ஞாயிற்றுக்கிழமை)** | **புதுச்சேரி** |
| **09.04.2024 (செவ்வாய்க்கிழமை)** | **மதுரை, சிவகங்கை** |
| **10.04.2024 (புதன்கிழமை)** | **தேனி, திண்டுக்கல்** |
| **12.04.2024 (வெள்ளிக்கிழமை)** | **திருப்பூர், நீலகிரி** |
| **13.04.2024 (சனிக்கிழமை)** | **கோவை, பொள்ளாச்சி** |
| **15.04.2024 (திங்கட்கிழமை)** | **திருவள்ளூர் வடசென்னை** |
| **16.04.2024 (செவ்வாய்க்கிழமை)** | **காஞ்சிபுரம், திருபெரும்புதூர்** |
| **17.04.2024 (புதன்கிழமை)** | **தென்சென்னை, மத்திய சென்னை** |

குறிப்பு : முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்கள் மேற்குறிப்பிட்டுள்ள இடங்களில் பிரச்சாரத்திற்கு குறித்த நேரத்திற்குள் செல்ல வேண்டியுள்ளதால், காலத்தின் அருமை கருதி, எக்காரணம் கொண்டும் கழக தோழர்கள், வழியில் வேறு எவ்வித நிகழ்ச்சிகளையும் ஏற்பாடு செய்திட வேண்டாமென கண்டிப்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை18.

**தலைமைக் கழகம்,**
தி.மு.க.

### மாநிலங்களின் கல்வி உரிமை, மொழி உரிமையை மீட்டெடுக்க

# 'இந்தியா' கூட்டணி வெல்வது காலத்தின் கட்டாயம்!

## தேனி நாடாளுமன்றத் தொகுதி தேர்தல் பிரச்சாரத்தில் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அறைகூவல்!

**உசிலம்பட்டி, மார்ச் 26-**

**தேனி நாடாளுமன்றத் தொகுதிக் குட்பட்ட உசிலம்பட்டியில் பெருந்திரளாகக் கூடியிருந்த மக்கள் மத்தியில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், தேனி நாடாளுமன்றத் தொகுதி தி.மு.க. வேட்பாளர் தங்க தமிழ்ச்செல்வனுக்கு வாக்குகள் சேகரித்தார்.**

**அப்போது அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அலைகடலெனத் திரண்டிருந்த மக்கள் மத்தியில் சிறப்புரையாற்றினார். "மாநிலங்களின் கல்வி உரிமை, மொழி உரிமையை மீட்டெடுக்க; "இந்தியா" கூட்டணி வெல்ல வேண்டியது காலத்தின் கட்டாயம்!" என்று குறிப்பிட்டார்.**

அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-



தேனி நாடாளுமன்றத் தொகுதியில், நம்முடைய மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியான, `இந்தியா கூட்டணி' சார்பாக கழகத்தின் வெற்றி வேட்பாளராக, நம் வெற்றிச் சின்னமாம் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிடுகிற தங்க தமிழ்ச் செல்வன் அவர்களுக்கு வாக்கு சேகரிக்கிற இந்தச் சிறப்பான பிரச்சாரக் கூட்டத்தில் பங்கேற்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

கடந்த 2019ஆம் ஆண்டு நடந்த நாடாளுமன்றத் தேர்தல், 2021ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தல் என இரண்டு தேர்தல்களிலும் உசிலம்பட்டி மக்கள் நம்மை ஏமாற்றி விட்டீர்கள். மறுபடியும் ஏமாற்றுவீர்களா? இப்போது மறுபடியும் ஏமாற்றினீர்கள் என்றால், நாம்தான் ஏமாந்து போவோம்.

### மிகப்பெரிய எழுச்சி

நான் பார்த்த மூன்று நாடாளுமன்றத் தொகுதிகளில் இந்த தேனி தொகுதியில்தான் மிகப்பெரிய எழுச்சி, மிகப்பெரிய ஆரவாரம், மிகப்பெரிய உற்சாகத்தைக் காண்கிறேன். ஆனால், இந்த தேனி நாடாளுமன்றத் தொகுதிக்கு ஒரு மிகப்பெரிய சிறப்பு இருக்கிறது.

அது என்ன சிறப்பு என்று உங்களுக்கே தெரியும். சென்ற முறை 2019 இல் 39 தொகுதிக்கு 38 தொகுதி வெற்றி பெற்றோம். லட்சக்கணக்கான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றோம். ஆனால், தேனி நாடாளுமன்றத் தொகுதியை மட்டும் நான் நம்பவே மாட்டேன்.

இந்த முறை நீங்கள் அதைச் செய்து விடுவீர்களா? எந்தச் சின்னத்திற்கு வாக்களிக்கப் போகிறீர்கள்? கையைக் காட்டிச் சொல்லுங்கள்.

(மக்களெல்லாம் கையை உயர்த்தி பலத்த குரலில் "உதயசூரியன்" என்கிறார்கள்) உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து, அண்ணன் தங்க தமிழ்ச் செல்வன் அவர்களை லட்சக்கணக்கான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற வைத்து நீங்கள் நாடாளுமன்றத்திற்கு அனுப்ப வேண்டும்.

### புதிய கல்விக் கொள்கை

புதிய கல்விக் கொள்கை மூலமாக, குலக்கல்வியை மறுபடியும் ஒன்றிய அரசு திணிக்கப் பார்க்கிறது. குலக்கல்வித் திட்டத்தைக் கொண்டு வருகிறார்கள். குலக்கல்வித் திட்டம் என்றால் என்ன? அப்பா என்ன தொழில் செய்கிறாரோ அதைத்தான் குழந்தையும் செய்ய வேண்டும், படிக்கக்கூடாது, வேலைக்குப் போகக்கூடாது. அப்பா செருப்பு தைத்தால், மகனும் செருப்பு தைக்க வேண்டும் என்ற ஒரே நோக்கத்தோடுதான் இந்தத் திட்டத்தைக் கொண்டு வருகிறார்கள்.

இதுவரைக்கும் இந்த ஐந்து வருடத்தில் இந்தி, சமஸ்கிருதத்தின் வளர்ச்சிக்கு கிட்டத்தட்ட 1,500 கோடி ரூபாய் ஒதுக்கி இருக்கிறார்கள். ஆனால், தமிழ் வளர்ச்சிக்கு இதுவரை எந்த நிதியும் ஒதுக்கவில்லை.

மோடி இங்கு வந்து நன்றாக வடை சுடுவார். வந்து பேசும்போது திருக்குறள் எல்லாம் பேசுவார். யாருக்குமே புரியாது. ஆனால் இதுவரைக்கும் தமிழ் வளர்ச்சிக்கு ஒரு ரூபாய் கூட ஒதுக்கவில்லை.

கல்வி உரிமை மொழியுரிமை ஆகியவற்றை நாம் மீட்டெடுக்க வேண்டும் என்றால் இந்தியா கூட்டணி வெற்றி பெறுவது காலத்தின் கட்டாயம்.

### கொரோனா பெருந்தொற்று

2021இல் நாம் ஆட்சிக்கு வரும்போது என்ன நிலைமை என்று உங்களுக்குத் தெரியும். கொரோனா பெருந்தொற்று. நாம் அனைவரும் வீட்டில் அடைந்து கிடந்தோம்.

மோடி என்ன செய்தார்? திடீரென்று, 'எல்லோரும் வீட்டிற்கு வெளியே வாருங்கள், விளக்கை ஏற்றுங்கள், தட்டு எடுத்து வாருங்கள், ஒலி எழுப்புங்கள்.

தொடர்ச்சி 3- ஆம் பக்கம்

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
செவ்வாய்க்கிழமை 26-03-2024

# ஆளுநர் வெளியேற வேண்டாமா?

உயர் கல்வித் துறை அமைச்சர் மாண்புமிகு பொன்முடி அவர்களுக்கு சென்னை உயர்நீதிமன்றம் வழங்கிய தண்டனையையும், தீர்ப்பையும் உச்சநீதிமன்றம் நிறுத்தி வைத்தது. இதன் மூலம் அவர் மீண்டும் சட்டமன்ற உறுப்பினராக ஆகிறார். இதனை பேரவைத் தலைவரும் அறிவித்தார். இதைத் தொடர்ந்து அவரை மீண்டும் அமைச்சராக ஆக்குவதற்கு முதலமைச்சர் அவர்கள் விரும்புகிறார்கள். இதனை ஆளுநர் ஆர்.என்.ரவிக்கு எழுதிக் கேட்கிறார்கள்.

**உச்சநீதிமன்றத் தீர்ப்பு மிகத் தெளிவாக இருப்பதால் உடனடியாக முதலமைச்சரின் எண்ணத்தை ஏற்றுக் கொண்டு க.பொன்முடி அவர்களுக்கு மீண்டும் பதவியேற்பு உறுதிமொழி நிகழ்வை ஆளுநர் நடத்தி இருக்க வேண்டும். ஆனால், ஆளுநர் ரவி அவ்வளவு நல்லவரும் அல்ல, சட்டம் அறிந்தவரோ, யார் பேச்சைக் கேட்பவராகவோ இல்லை.**

**திருக்குறளையும் வள்ளலாரையும் வைகுண்டரையும் அரைகுறையாகப் படித்ததைப் போல சட்டத்தையும் அரைகுறையாகப் படித்தவரை ஆளுநராக வைத்திருந்தால் என்ன நடக்கும்? இப்படித்தான் இருக்கும். தன்னுடைய ஞானப்பிரதாபத்தைக் காட்டுவதைப் போல ஒரு அறிக்கையை ஊடகங்களில் கசிய விட்டுவிட்டு, பின்னர் அதனை அரசுக்கு அனுப்பி வைத்திருக்கிறார்கள்.**

**யாரை அமைச்சராக வைக்க வேண்டும் என்பது முதலமைச்சரின் விருப்புரிமை சார்ந்தது. அதைக் கூடத் தெரிந்து கொள்ளாமல், தான் நினைப்பதை எல்லாம் செய்வதற்கான அதிகாரம் கவர்னருக்கு இருப்பதாக ரவி நினைத்துக் கொள்கிறார். பிரிட்டிஷ் ஆட்சி காலத்தில் கூட கவர்னர் ஜெனரல்களுக்கு அத்தகைய அதிகாரம் இல்லை. பிரிட்டிஷ் ஆட்சி சொல்வதைக் கேட்டுச் செய்ய வேண்டியது தான் அந்தக் காலத்து கவர்னர் ஜெனரல்களின் அதிகாரம் ஆகும்.**

இன்றைய குடியாட்சி காலத்தில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுக்குத் தான் அனைத்து அதிகாரமும் இருக்கிறது. தலைமை அமைச்சரான பிரதமருக்குத்தான் அனைத்து அதிகாரங்களும் உண்டு. குடியரசுத் தலைவருக்கு அல்ல. அதே போல மாநிலங்களில் முதலமைச்சர்களுக்குதான் அனைத்து அதிகாரமும் உண்டு. ஆளுநர்களுக்கு அல்ல. சில சடங்குகளைச் செய்வதற்காக இவர்கள் பயன்படுத்தப்படுகிறார்கள். அவ்வளவுதான். இதுவும் பிரிட்டிஷ் ஆட்சி காலத்தின் மிச்ச சொச்சங்களே. மேலும், உச்சநீதிமன்றத்தின் பல்வேறு வழக்குகள் ஆளுநர்கள் அதிகாரமற்றவர்கள் என்பதை விளக்கி இருக்கின்றன.

**கடந்த மூன்றாண்டு காலத்திலும் இதே போன்ற எத்தனையோ தீர்ப்புகளில் ஆளுநர்களுக்கு அறிவுரை சொல்லி மூலையில் உட்கார வைத்துள்ளன உச்சநீதிமன்றங்கள்.**

மாண்புமிகு அமைச்சர் பொன்முடி தொடர்பான வழக்கில் உச்சநீதிமன்றம் அளித்துள்ள தீர்ப்பு சட்ட வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தீர்ப்பு ஆகும். "உச்சநீதிமன்றத்தின் இரு நீதிபதிகள் அமர்வு பொன்முடியின் தண்டனையையும் தீர்ப்பையும் நிறுத்தி வைக்கிறது என்றால் இடைக்காலமாக ரத்து செய்யப்படுகிறது என்று பொருள். இப்படி உத்தரவிட்ட நிலையில் தண்டனையை ரத்து செய்யவில்லை என்று ஆளுநர் எப்படிச் சொல்கிறார்? இப்படிச் சொல்லும் அவசியம் ஏன் ஏற்பட்டது. அவருக்கு ஆலோசனை சொல்பவர்கள் முறையாக ஆலோசனை சொல்வதில்லை என்று தோன்றுகிறது. தமிழ்நாடு ஆளுநர் அங்கு உட்கார்ந்து என்ன செய்து கொண்டு இருக்கிறார். அவரது செயல்பாடுகள் தீவிரமாக பார்க்க வேண்டியதாக உள்ளன. அது பற்றி மேலும் இந்த நீதிமன்றத்தில் சப்தமாக நாங்கள் சொல்ல விரும்பவில்லை" என்று உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி சந்திரசூட், நீதிபதிகள் பி.பார்த்திவாலா, மனோஜ் மிஸ்ரா அமர்வு சாட்டையால் அடித்தது.

**"ஓர் அமைச்சர் குறித்து ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு கருத்து இருக்கலாம். ஆனால் அரசமைப்புச் சட்டம் என்ன சொல்கிறது என்பது தான் முக்கியம். ஆளுநர் என்பவர் ஒரு மாநிலத்தின் காப்பாண்மைத் தலைவர். மாநில அரசுக்கு அறிவுரை கூறும் அதிகாரம் மட்டுமே அவருக்கு உண்டு. ஒருவரை அமைச்சரவையில் சேர்க்க முதலமைச்சர் விருப்பம் தெரிவிக்கும் போது அதை ஆளுநர் பரிசீலித்து நடைமுறைப்படுத்த வேண்டும். அதுதான் நாடாளுமன்ற ஜனநாயகம்" என்று தெள்ளத் தெளிவாக உச்சநீதிமன்ற நீதிபதிகள் அமர்வு சொன்னது.**

இதற்குப் பிறகும் பிரச்சினையை புரிந்து கொண்டு ஆளுநர் செயல்படுவார் என்ற நம்பிக்கை உச்சநீதிமன்றத்துக்கு இல்லாததால், ஆளுநருக்கு கெடுவும் விதித்தார்கள் நீதியரசர்கள். "பொன்முடி விவகாரத்தில் 24 மணி நேரத்துக்குள் ஆளுநர் பதில் அளிக்க வேண்டும். இல்லையெனில் அரசியலமைப்புச் சட்டப்படி செயல்படுமாறு ஆளுநருக்கு உத்தரவிட நேரிடும்" என்று நீதிபதிகள் எச்சரிக்கையே செய்தார்கள். இவை அனைத்தும் மார்ச் 21 ஆம் தேதி காலையில் நடந்த விவாதங்கள் ஆகும். உடனடியாக 22 ஆம் தேதி காலையில் பதவியேற்பு விழாவை ஆளுநர் நடத்தி இருக்க வேண்டும். உச்சநீதிமன்றத்தையே மீறும் வகையில் தாமதம் செய்துள்ளார் ஆளுநர்.

22 ஆம் தேதி உச்சநீதிமன்றம், ஆளுநரை கண்டிப்பதோடு நிறுத்தாமல் அவர் எதற்காக பதவியில் இருக்க வேண்டும் என்று கேட்டு விடக் கூடாது அல்லவா? அதனால் 22 ஆம் தேதி மதியம் 3.30 மணிக்கு மாண்புமிகு அமைச்சர் பொன்முடி அவர்களுக்கு பதவியேற்பு விழாவை நடத்தி முடித்துவிட்டார் ஆளுநர்.

**ஆளுநர் இப்போது உச்சநீதிமன்றத் தீர்ப்பின் படி பதவியேற்பை செய்து கொடுத்துவிட்டார். மனச்சாட்சிப்படி அவர் எப்போது வெளியேறப் போகிறார்?**



திருப்பத்தூர் மாவட்டம், வாணியம்பாடியில் தி.மு.க. தேர்தல் பணிமனையை கழகப் பொதுச் செயலாளர் – நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் திறந்து வைத்தார். உடன் பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, வேட்பாளர் கதிர் ஆனந்த், மாவட்டக் கழகச் செயலாளர் க.தேவராஜி எம்.எல்.ஏ., நகரச் செயலாளர் சாரதிகுமார் மற்றும் கழக நிர்வாகிகள், கூட்டணி கட்சியினர் உள்ளனர்.

### பெரம்பலூர் நாடாளுமன்றத் தொகுதி கழக வேட்பாளர்

# அருண் நேருவை ஆதரித்து அமைச்சர் கே.என்.நேரு பிரச்சாரம்!

## துறையூரில் தி.மு.க. அரசின் சாதனைகளை எடுத்துக் கூறி வாக்கு சேகரிப்பு!

துறையூர், மார்ச் 26 -

நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற உள்ள நிலையில் கழக முதன்மைச் செயலாளரும், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சருமான கே.என்.நேரு பெரம்பலூர் நாடாளுமன்ற தனது முதல் கட்ட பிரச்சார பயணத்தை தொடங்கினார்.

துறையூர் தொகுதி கோட்டத்தூரில் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, பெரம்பலூர் தொகுதி வேட்பாளர் அருண் நேருக்காக, கழக அரசின் சாதனைகளை கூறி உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் கேட்டு பிரச்சாரத்தை தொடங்கி வைத்தார். புத்தனாம்பட்டி அபினிமங்கலம், துறையூர் ஒன்றியத்தில் உள்ள பகளவாடி, காளிப்பட்டி, சிங்களாந்தபுரம், கண்ணனூர், மதுராபுரி உள்ளிட்ட 50க்கும் மேற்பட்ட கிராமங்களில் தி.மு.க. அரசின் சாதனைகளை விளக்கி பிரச்சாரம் செய்தார். துறையூர் நகரம் பாலக்கரையில் அமைச்சர் கே.என்.நேரு பேசும்போது,

துறையூர் நகரை விரிவுபடுத்த அனைத்து நடவடிக்கையும் எடுக்கப்படும். தற்பொழுது புறவழிச் சாலை குடிநீர் வசதி திட்டங்கள் நடைபெற்று வருகின்றன. மலைவாழ் மக்களுக்கு எடை மெஷின் அமைத்து தர கூறினார்கள் உடனடியாக தி.மு.க. அரசால் செய்து தரப்பட்டுள்ளது. இது போல் பல திட்டங்கள் நிறைவேற தி.மு.க.வுக்கு வாக்களிக்குமாறு கேட்டுக் கொண்டார். பிரச்சாரத்தில் வடக்கு மாவட்ட செயலாளர் எம்.எல்.ஏ. காடுவெட்டி தியாகராஜன், துறையூர் எம்.எல்.ஏ. ஸ்டாலின் குமார், மாவட்ட ஊராட்சி மன்றத் தலைவர் தர்மன் ராஜேந்திரன், நகரச் செயலாளர் முரளி, துறையூர் நகர மன்றத் தலைவர் செல்வராணி மலர் மன்னன்,

துறையூர் ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் சரண்யா மோகன்தாஸ், ஒன்றியச் செயலாளர்கள் அண்ணாதுரை, சிவ.சரவணன், வீரபத்திரன், மாவட்ட அரசு ஆதிதிராவிடர் நல தலைவர் மகாலிங்கம் விளையாட்டு மேம்பாட்டு அணி மாவட்ட அமைப்பாளர் சுரேஷ்குமார், நகர துணைச் செயலாளர் இளங்கோ பிரபு, திருச்சி வடக்கு மாவட்ட காங்கிரஸ் தலைவர் திருச்சி கலை, வி.சி.க. வடக்கு மாவட்டச் செயலாளர் கலைச்செல்வன், முன்னாள் ராணுவத்தினர் பிரிவு மாநிலச் செயலாளர் கேப்டன் சுபாஷ் ராமன் உள்ளிட்ட நிர்வாகிகள் மற்றும் தோழமைக் கட்சி நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டு தீவிர பிரச்சாரம் செய்து வருகின்றனர்.

### ஆலையை திறக்க உச்சநீதிமன்றத்தில் முயற்சித்தபோது மக்களின் பக்கம் நின்று

# ஸ்டெர்லைட் ஆலையை நிரந்தரமாக மூடியவர் முதல்வர் மு.க.ஸ்டாலின்!

## தூத்துக்குடி தேர்தல் பிரச்சாரத்தில் கனிமொழி கருணாநிதி பேச்சு!

*தூத்துக்குடி, மார்ச் 26 -*

*தூத்துக்குடி நாடாளுமன்றத் தொகுதியில் 'இந்தியா' கூட்டணி வேட்பாளரும், தி.மு.க. துணைப் பொதுச் செயலாளருமான கனிமொழி கருணாநிதி நேற்று முன்தினம் (24.3.2024) தூத்துக்குடி கலைஞர் அரங்கம் முன்பு உள்ள முத்தமிழ் அறிஞர் கலைஞர் கருணாநிதியின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து பிரச்சாரத்தைத் தொடங்கினார்.*

*பிரச்சாரத்தில் கனிமொழி கருணாநிதி பேசியதாவது:-*

*தூத்துக்குடி என்பது எனக்கு இரண்டாவது தாய் வீடாக உணரக்கூடிய வகையில் உள்ளது. நாடும் நமது, நாற்பதும் நமது என்ற வகையில் நாம் பணியாற்ற வேண்டும் எனவும் தமிழகத்தை தொடர்ந்து வஞ்சித்துக் கொண்டு தமிழகத்துக்கு வர வேண்டிய நிதியையும், ஏன் வெள்ள நிவாரணம் கூட தராமல் வஞ்சித்துக் கொண்டிருக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசை வீட்டுக்கு அனுப்ப வேண்டும்.*

*பிரதமர் மோடி தற்போது அடிக்கடி தமிழகத்துக்கு வருகிறார் வெள்ளம் பாதித்த நேரங்கள் கூட வராத பிரதமர் தற்போது வருகிறார் வந்து தி.மு.க.வை அழித்து விடுவதாக பேசி வருகிறார். தி.மு.க.வை யாராலும் அழிக்க முடியாது, அழித்து விடுவேன் என சொன்னவர்கள்தான் காணா மல் போய் உள்ளனர்.*

*தி.மு.க. ஆட்சி மூலம் இந்த நாட்டுக்கு முன் உதாரணமாகத் திகழ்ந்து வருகிறது. அதனால்தான் தற்போதைய இந்த தேர்தல் அறிக்கையில் கூட மகளிர் உரிமைத் தொகையை நாடு முழுவதும் விரிவுபடுத்தப்படும் எனவும் அதுபோல் காலை உணவுத் திட்டத்தையும் நாடு முழுவதும் அமல் செய்வோம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*மேலும் ஒன்றிய பா.ஜ.க. ஆட்சியில் பெட்ரோல் விலை டீசல் விலை மற்றும் கேஸ் விலை ஏற்றி மக்களை ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் நமது இந்தியா கூட்டணி அரசு வரும் போது பெட்ரோல் விலை ரூபாய் 75, டீசல் விலை ரூபாய் 65, அதுபோல் காஸ் சிலிண்டர் விலை 500 ஆக அனைத்தும் குறைக்கப்படும். மக்களை விலைவாசியிலிருந்து காப்பாற்றும் அரசாக அந்த அரசு செயல்படும் எனவும் தெரிவித்தார்.*

*மக்களுக்கு எந்தவித நிதி உதவியும் செய்யாமல் அதே போல ஒரு பைசா கூட வழங்காமல் தமிழ்நாட்டிலிருந்து வரி வசூல் பண்ணி அங்கே இருக்கக்கூடிய ஒன்றிய அரசுக்கு நாம் ஒரு ரூபாய் கொடுத்தால், அவர்கள் நமக்குத் திருப்பி கொடுப்பது 26 பைசா, ஆனால் உத்தரப் பிரதேசத்திலிருந்து 1 ரூபா வரி கொடுத்தால் 2 ரூபாய் 2 பைசா. எந்த அளவுக்கு அவர்கள் தமிழகத்தை, தமிழ் மக்களை ஏமாற்றுகிறார்களா என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.*

*அதேபோல ஒன்றிய பா.ஜ.க. கொண்டு வந்த சட்டத்திற்கு டெல்லியில் ஆதரவு கொடுத்தது அ.தி.மு.க. நாங்கள் இப்போது பிரிந்து நிற்கிறோம் என்றால் நம்பாதீர்கள் இரண்டு ஸ்டிக்கரும் மீண்டும் இணைந்து கொள்ளும். இங்கே இருக்கும் பெண்களின் உயர்கல்விக்காகப் புதுமைப்பெண் திட்டத்தில் மாதம் 1000 ரூபாய் வழங்கி வருகிறோம்.*



*ஸ்டெர்லைட் ஆலையை மூடக்கோரி போராட்டத்தில் 13 பேர் சுட்டுக்கொல்லப்பட்டனர். இந்த ஆலையை மீண்டும் திறக்க வேண்டுமென்ற போது, முதலமைச்சர் மக்கள் பக்கம் நின்று ஆலையை மூட நடவடிக்கை எடுத்தார். வரக்கூடிய இந்த தேர்தலிலே தமிழ்நாட்டில் மட்டுமல்ல இந்தியாவிலிருந்தே பா.ஜ.க. விரட்டி அடிக்கப்பட வேண் டும். இந்தியா கூட்டணி இங்கு ஆட்சி அமைக்க வேண்டும்.*

*நம்முடைய இளைஞர்கள் கல்விக்காக வாங்கி இருக்கக் கூடிய கடன் ரத்து செய்யப்படும். அதுமட்டுமில்லாமல் நீங்க வெளியூர் போகும்போது ஒவ்வோர் இடத்திலும் சுங்கச்சாவடியில் நிறுத்தி காசு வாங்குகிறார்கள் அந்த சுங்கச்சாவடியில் வாங்கக்கூடிய காசு எல்லாம் நிறுத்தப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். உங்களுடைய பொன்னான வாக்குகளை உதயசூரியன் சின்னத்தில் அளித்து மீண்டும் உங்களோடு பணியாற்றக் கூடிய வாய்ப்பை நீங்கள் எனக்கு அளிக்க வேண்டும் என்று உங்களையெல்லாம் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.*

*இவர்கள் அரசியலால் மணிப்பூரில் எத்தனை பெண்கள் பாதிக்கப்பட்டனர், அதனை நான் கண் கூடாகப் பார்த்தேன். நான் பலமுறை தூத்துக்குடி விமானநிலையத்தில் சர்வதேச விமான நிலையமாக்க கோரிக்கை வைத்தான், மறுக்கப்பட்டது. ஆனால், அம்பானி வீட்டில் கல்யாணம் ஒரு சின்ன விமான நிலையத்தை, பத்து நாட்களில் பன்னாட்டு விமான நிலையமாக மாற்றித் தருகிறார் பிரதமர் மோடி. அம்பாணி, அதானி உத்தரவு போட்டால் அது நடக்காது, மக்கள் உதவி கேட்டல் நடக்காது. மக்களுக்காக பணியாற்றக்கூடிய இந்தியா கூட்டணி ஆட்சியில் அமர வேண்டும்.*

*இவ்வாறு அவர் பேசினார்.*

*தூத்துக்குடி வடக்கு மாவட்டச் செயலாளரும், சமூக நலன் - மகளிர் உரிமைத்துறை அமைச்சருமான பெ.கீதா ஜீவன், தூத்துக்குடி மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி மற்றும் 'இந்தியா' கூட்டணிக் கட்சியின் தலைவர்கள், நிர்வாகிகள், தொண்டர்கள் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.*

*தூத்துக்குடி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட கலைஞர் அரங்கம், மாரியம்மன் கோயில், TMC காலனி ஜங்ஷன், காசி நாடார் ஆயில் மில், ஆமெரிக்கன் ஆஸ்பத்திரி அருகில், உருண்டையம்மன் கோவில் அருகே, கருப்பட்டி சொசைட்டி, பூபால்ராயபுரம், திரேஸ் புரம் ஜங்ஷன், புது தெரு, மட்டக்கடை, 2ஆம் கேட் போஸ் திடல், தேரடி, பள்ளிவாசல், PPMT ஜங்ஷன், சுமங்கலி கல்யாண மண்டபம், பீங்கான் ஆபிஸ், பக்கில்புரம், KSPS தியேட்டர், சிதம்பர நகர், பிரையண்ட் நகர் 12வது தெரு, 3ஆம் மைல், பழைய பஸ்டாண்டு, அண்ணாநகர் ஆகிய இடங்களில் கனிமொழி கருணாநிதி பிரச்சாரம் செய்தார்.*



தருமபுரி நாடாளுமன்றத் தொகுதி தேர்தல் அலுவலகத்தை வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் திறந்து வைத்தார்.உடன் தருமபுரி நாடாளுமன்ற 'இந்தியா' கூட்டணி கழக வேட்பாளர் வழக்கறிஞர் ஆ.மணி, கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் தடங்கம் பெ.சுப்ரமணி,மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் முனைவர் பி.பழனியப்பன், முன்னாள் மாவட்டச் செயலாளர் பி.என்.பி.இன்பசேகரன், நகரச் செயலாளர் நாட்டான் மாது, ஐ.டி.விங் மாநில துணைச் செயலாளர் டாக்டர் ஏ.கே.தருண், கழக நிர்வாகிகள், கூட்டணிக் கட்சி தோழர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# தேனி தொகுதி தேர்தல் பிரச்சாரத்தில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உரை! முதல் பக்கத் தொடர்ச்சி!

இப்படிச் செய்தால் கோவிட் பயந்து ஓடிவிடும்’ என்று சொன்னாரா இல்லையா?

இந்தியாவுக்கே எடுத்துக்காட்டாக நம் முதலமைச்சர்தான் தடுப்பூசி போட்டு, விழிப்புணர்வை ஏற்படுத்தினார். இந்த கோவிட்டிலிருந்து தப்பிக்க வேண்டும் என்றால், அனைவரும் தடுப்பூசிப் போட்டுக்கொள்ள வேண்டும் என்று இந்தியாவிலேயே முதன்முதலாகச் சொன்னது நமது முதல்வர் அவர்கள்தான்.

கோவிட் பாதுகாப்பு உடையை அணிந்து கொண்டு கோவிட் வார்டுக்குள் சென்ற ஒரே முதலமைச்சர் நம் முதலமைச்சர் அவர்கள்தான்.

**கணக்கு இல்லை**

பத்து வருட கால ஒன்றிய பா.ஜ.க அரசின் ஊழலைப் பற்றி, சி.ஏ.ஜி. என்ற அரசு அமைப்பு சொல்கிறது. அவர்கள் வேலை, மாநில மற்றும் ஒன்றிய அரசுகளின் செலவுகளைத் தணிக்கை செய்வது. அவர்கள் ஆறு மாதத்திற்கு ஒரு அறிக்கை விடுவார்கள்.

இப்போது அவர்கள் என்ன சொல்லி இருக்கிறார்கள் என்றால், கடந்த 10 வருடத்தில் ஏழரை லட்சம் கோடிரூபாயை ஒன்றிய அரசு செலவு செய்திருக்கிறது. அந்த ஏழரை லட்சம் கோடி ரூபாய்க்குக் கணக்குக் கிடையாது. ஏழரை லட்சம் கோடி ரூபாய் எங்கே போனது, என்று தெரியவில்லை. ஒரு கிலோமீட்டர் ரோடு போடுவதற்கு ஒன்றிய பா.ஜ.க அரசு எவ்வளவு தெரியுமா செலவு கணக்கு காட்டி இருக்கிறது? சுமார் 250 கோடி ரூபாய் !

அது மட்டுமல்ல. ‘ஆயுஷ்மன் பாரத்’ என்ற ஒரு திட்டம். இறந்து போன 88 ஆயிரம் பேருக்கு மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் என்று ஒரே நம்பரிலிருந்து போய் இருக்கிறது. அதுமட்டுமல்ல, `பி.எம். கேர்ஸ் ஃபண்ட்’ என்று ஒன்று இருக்கிறது. அதில் இதுவரைக்கும் 32 ஆயிரம் கோடி ரூபாயை பா.ஜ.க. வசூல் செய்திருக்கிறது. அதற்கும் கணக்குக் கிடையாது. யார் கேட்டாலும் பதில் சொல்ல மாட்டேன் என்கிறார்கள்.

இப்போது ஐ.பி.எல்.மேட்ச் நடந்து கொண்டிருக்கிறது. அதில் நிறைய அணிகள் இருக்கின்றன. சென்னை, டெல்லி, மும்பை, பெங்களூர் அணி போன்று நிறைய அணிகள் இருக்கின்றன. இவர்கள் இந்தியாவில் ஒரே குழுவில்தான் விளையாடுவார்கள். ஐ.பி.எல் தொடரும் அ.தி.மு.க.வும் ஒன்றுதான். அ.தி.மு.க.வில் பார்த்தீர்கள் என்றால், டி.டி.வி அணி, ஓ.பி.எஸ் அணி, சசிகலா அணி, ஈ.பி.எஸ் அணி, மோடி அணி, ஜெ.தீபா அணி, ஜெ.தீபாவின் டிரைவர் அணி என பல அணிகள் உள்ளன.

**அ.தி.மு.கவில் பல அணிகள்!**

*இப்போது ஐ.பி.எல்.மேட்ச் நடந்து கொண்டிருக்கிறது. அதில் நிறைய அணிகள் இருக்கின்றன. சென்னை, டெல்லி, மும்பை, பெங்களூர் அணி போன்று நிறைய அணிகள் இருக்கின்றன. இவர்கள் இந்தியாவில் ஒரே குழுவில்தான் விளையாடுவார்கள். ஐ.பி.எல் தொடரும் அ.தி.மு.க.வும் ஒன்றுதான். அ.தி.மு.க.வில் பார்த்தீர்கள் என்றால், டி.டி.வி அணி, ஓ.பி.எஸ் அணி, சசிகலா அணி, ஈ.பி.எஸ் அணி, மோடி அணி, ஜெ.தீபா அணி, ஜெ.தீபாவின் டிரைவர் அணி என பல அணிகள் உள்ளன.*

என்ன, ஐ.பி.எல். போட்டியில் வீரர்கள் காசு வாங்கிக் கொண்டு விளை யாடுவார்கள். அதைத்தான் இப்போது அ.தி.மு.க. அணிகள் செய்து கொண்டிருக்கிறார்கள். இதற்கெல்லாம் அவர்கள் பதில் சொல்ல வேண்டிய நேரம் வந்துவிட்டது.

நான் இன்று இங்கு வந்திருக்கிறேன். உங்களிடம் பேசி இருக்கிறேன். நீங்களும் கேட்டு இருக்கிறீர்கள். கேட்டுவிட்டு கலைந்து போய் விடக்கூடாது. இதற்குப் பிறகு தலைவர் அவர்கள் இன்னும் ஒரு வாரத்தில் வருவார். உங்களை எல்லாம் சந்திப்பார். உங்களுடன் உரையாற்றுவார்கள்.

**உங்கள் பொறுப்பு!**

அடுத்த 19 ஆம் தேதி தேர்தல். இன்றைக்கு தேதி 23. இன்னும் 23, 24 நாட்கள் தான் இருக்கின்றன. அடுத்த 24 நாட்கள், இந்தப் பிரச்சாரத்தை நீங்கள் ஒவ்வொரு வீடாக, ஒவ்வொரு வாக்காளராக நீங்கள் பிரித்துக் கொள்ள வேண்டும். `இந்தப் பத்து வாக்காளருக்கு நான் பொறுப்பு’, `இந்த ஐந்து வீட்டிற்கு நான் பொறுப்பு’ என அவர்கள் அனைவரையும் 19 ஆம் தேதி வாக்குச் சாவடிக்கு அழைத்து வந்து உதயசூரியன் சின்னத்தில் வாக்களிக்க வைக்க வேண்டியது உங்கள் பொறுப்பு.

நீங்கள் மூன்று லட்சம் வாக்கு வித்தியாசத்தில் வெற்றிபெற வைத்து விடுங்கள், நான் மாதம் இரண்டு நாள் தேனியில் வந்து உங்களுடன் தங்குகிறேன்.

தமிழ்நாடு, புதுச்சேரி 40 க்கு 40 தொகுதி வெற்றி பெறப்போவது உறுதி. ஆனால், அத்தனை தொகுதிகளை விட எனக்கு, தலைவருக்கு, இந்த தேனி தொகுதி மிக மிக முக்கியம். அதை நீங்கள் உணர்ந்து விட்டீர்களா? வருகின்ற ஜூன் 3 ஆம் தேதி கலைஞர் அவர்களின் நூறாவது பிறந்தநாள். ஜூன் 4 ஆம் தேதி தேர்தல் வாக்கு எண்ணிக்கை. கலைஞரின் உடன்பிறப்புகள் நீங்கள் அத்தனை பேரும் ஒரு உறுதி மொழியை எடுத்துக் கொள்ளுங்கள். ஜூன் 3 ஆம் தேதி கலைஞரின் பிறந்த நாள் பரிசாக தேனி தொகுதி உள்ளிட்ட 40 தொகுதிகளிலும் வெற்றி பெற வைத்துக் காட்ட வேண்டும்.

உங்களையெல்லாம் அன்போடு கேட்கிறேன். பாசத்தோடு கேட்கிறேன். உரிமையோடு கேட்கிறேன். உங்கள் வீட்டுப் பிள்ளையாக இருந்து கேட்கிறேன். இன்னும் பெருமையாகச் சொல்ல வேண்டும் என்றால் தலைவரின் மகனாகக் கேட்கிறேன். இன்னும் பெருமையாகச் சொல்ல வேண்டுமென்றால் முத்தமிழறிஞர் கலைஞரின் பேரனாக இருந்து கேட்கிறேன்.

உதயசூரியன் சின்னத்தில் அண்ணன் தங்க தமிழ்ச் செல்வன் அவர்களுக்கு வாக்களித்து மிகப்பெரிய வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற வைத்து, அவரை நாடாளுமன்றத்திற்கு அனுப்புங்கள். உங்கள் வரவேற்புக்கும் அன்புக்கும் நன்றி! நன்றி!! நன்றி!!!

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேசினார்.

தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் மதுரை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் பி.மூர்த்தி, தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் சேடப்பட்டி மு.மணிமாறன், இளைஞர் அணி மாநில துணைச் செயலாளர்கள் இன்பா ரகு, ஜி.பி.ராஜா, தொகுதிப் பார்வையாளர் மாரியப்பன் கென்னடி, நகர கழகச் செயலாளர் தங்கபாண்டியன், எம்.ஆர்.எம்.டி.பழனி, எஸ்.வி.எஸ்.முருகன், அஜித் பாண்டியன், ஜெயச்சந்திரன் முத்து ராமன், சுதாகர், செல்வ பிரகாஷ், சங்கரபாண்டி, ஜெயராமன், மாவட்டத் துணைச் செயலாளர் சிவனாண்டி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் இள. மகிழன், நகரக் கழக முன்னாள் செயலாளர் தங்கமயில் பாண்டியன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் விமல் உள்பட பலரும் கலந்து கொண்டனர்.



அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், தேனி நாடாளுமன்றத் தொகுதி தேர்தல் பிரச்சாரத்தின்போது, தம்மை வரவேற்று புத்தகம் அன்பளிப்பாக வழங்கிய சிறுமியிடம் வாஞ்சையோடு அளவளாவி மகிழ்ந்து வாழ்த்துகிறார்!

---

அமைச்சர் செஞ்சி மஸ்தான் தலைமையில்

## மைலம் சட்டமன்றத் தொகுதி ‘இந்தியா’ கூட்டணி செயல் வீரர்கள் கூட்டம்!

### ஆரணி தொகுதி கழக வேட்பாளர் தரணி வேந்தனை அறிமுகம் செய்து வைத்து அமைச்சர் எ.வ.வேலு சிறப்புரை!



செஞ்சி, மார்ச் 26-

விழுப்புரம் வடக்கு மாவட்டம் ஆரணி நாடாளுமன்றத் தொகுதிக்கு உட்பட்ட மைலம் சட்டமன்றத் தொகுதி இந்தியா கூட்டணி சார்பில் செயல் வீரர்கள் கூட்டம் மயிலம் ஒன்றியம் தீவனூர் கலைஞர் திடலில் நாளை (27.3. 2024 - புதன்கிழமை) மாலை 4.00மணிக்கு நடைபெறுகிறது கூட்டத்திற்கு விழுப்புரம் வடக்கு மாவட்டச் செயலாளரும் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சருமான செஞ்சி மஸ்தான் தலைமை தாங்குகிறார்.

கூட்டத்தில் பொதுப்பணித்துறை மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் எ.வ.வேலு சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு ஆரணி நாடாளுமன்றத் தொகுதியின் இந்தியா கூட்டணி சார்பில் போட்டியிடும் தி.மு.க. கழக வேட்பாளர் தரணி வேந்தனை அறிமுகம் செய்து வைத்து சிறப்புரை ஆற்றுகிறார் .

இதில் தி.மு.க. தலைமைக் கழக தொகுதி பொறுப்பாளர்ஜெரால்டு, மைலம் தொகுதி பொறுப்பாளரும்மாவட்ட அவைத் தலைவர் டாக்டர் சேகர், மாநில தீர்மானக் குழு துணை தலைவர் டாக்டர் மாசிலாமணி, மாநில தீர்மானக் குழு உறுப்பினர்கள் சேது நாதன், செஞ்சி சிவா, மாநில காங்கிரஸ் கட்சியின் துணை தலைவர் ரங்க பூபதி, ம.தி.மு.க. மாநில துணை பொதுச் செயலாளர் ஏ. கே. மணி, விழுப்புரம் மாவட்ட காங்கிரஸ் கட்சி தலைவர் ஆர். பி. ரமேஷ், சி.பி.எம். கட்சியின் விழுப்புரம் மாவட்டச் செயலாளர் ராமமூர்த்தி, சி.பி.ஐ .கட்சியின் விழுப்புரம் மாவட்டச் செயலாளர் சரவணன், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் மாவட்ட செயலாளர்கள் திலீபன், தனஞ்செழியன்,

ஆரணி நாடாளுமன்ற தொகுதி தேர்தல் பொறுப்பாளர் நன்மாறன், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் மண்டல செயலாளர் எழில்மாறன், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் கௌரவ தலைவர் சையத் மஸ்ஜித் பாபு, ம.தி.மு.க. மாவட்டச் செயலாளர் பாபு கோவிந்தராஜ், தா.மு.மு.க. மாநில செயலாளர் முஸ்தாக்கின், மனிதநேய மக்கள் கட்சியின் மாநில செயற்குழு உறுப்பினர்சையத் உஸ்மான், தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் மாவட்ட செயலாளர் கோபாலன், மக்கள் நீதி மையக் கட்சியின் வடக்கு மண்டல பொறுப்பாளர் ஸ்ரீபதி,

கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டச் செயலாளர்கள் சுப்பிரமணி, சௌரிராஜன், மாவட்ட நிர்வாகக் குழு கலியமூர்த்தி, இன்ப ஒலி, செயற்குழு ராஜேந்திரன், வல்லம் ஒன்றிய பெருந் தலைவர் அமுதா ரவிக்குமார், மயிலம் ஒன்றிய பெருந்தலைவர் யோகேஸ்வரி மணிமாறன்,பொதுக் குழு உறுப்பினர்கள் வீடு ரவி, சாந்தி ஏழுமலை, ஒன்றிய செயலாளர்கள் வல்லம் வடக்கு அண்ணாதுரை, தெற்கு துரை, மத்தியம் இளம்வழுதி, ஒலக்கூர் மேற்கு ஒன்றிய செயலாளர் ராஜாராமன், மயிலம் மத்திய ஒன்றிய செயலாளர் செழியன்,

வல்லம் ஒன்றிய துணை பெருந் தலைவர் மலர்விழி அண்ணாதுரை, மயிலம் ஒன்றிய துணை பெருந் தலைவர் புனித ராமஜெயம், மாவட்ட கவுன்சிலர்கள் அன்பு செழியன், சசிகலா மோகனசுந்தரம், மகேஸ்வரி குமரேசன், விஜயன், மனோ சித்ரா ராஜேஸ்வரன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆனந்த், மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் ரகுபதி, சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு அமைப்பாளர் அன்சாரி, மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுனர் அணி அமைப்பாளர் தமிழரசன், மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை அமைப்பாளர் செந்தில் குமார், விவசாயத் தொண்டர் அணி அமைப்பாளர் அண்ணாதுரை, மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் ரோமியன், மாவட்டஇளைஞர் அணி அணி துணை அமைப்பாளர்கள் விஜயகுமார், அண்ணாமலை உள்ளிட்ட மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் ,கிளைக் கழக நிர்வாகிகள், அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் உள்ளிட்டோர் கலந்து கொள்கின்றனர். மயிலம் வடக்கு ஒன்றிய செயலாளர் மணிமாறன் நன்றி கூறுகிறார்.

---

முத்தமிழறிஞர் கலைஞர் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து

## கனிமொழி கருணாநிதி பிரச்சாரத்தைத் தொடங்கினார்!

### வழியெங்கும் மக்கள் திரண்டனர்!

தூத்துக்குடி, மார்ச் 26-

தூத்துக்குடி நாடாளுமன்றத் தொகுதியில் ‘இந்தியா’ கூட்டணி வேட்பாளரும், தி.மு.க. துணைப் பொதுச்செயலாளருமான கனிமொழி கருணாநிதி நேற்று முன்தினம் (24.03.2024) தூத்துக்குடி கலைஞர் அரங்கம் முன்பு உள்ள கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து பிரச்சாரத்தைத் தொடங்கினார்.

தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க செயலாளரும், சமூக நலன் - மகளிர் உரிமைத்துறை அமைச்சருமான பெ.கீதாஜீவன், தூத்துக்குடி மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி மற்றும் ‘இந்தியா’ கூட்டணிக் கட்சியின் தலைவர்கள், நிர்வாகிகள், தொண்டர்கள் உள்ளிட்ட பலர்உடனிருந்தனர்.

தூத்துக்குடி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட கலைஞர் அரங்கம், மாரியம்மன் கோயில், டி.எம்.சி. காலனி ஜங்ஷன், காசி நாடார் ஆயில் மில், அமெரிக்கன் ஆஸ்பத்திரி அருகில், உருண்டையம்மன் கோவில் அருகே, கருப்பட்டி சொசைட்டி, பூபால்ராயபுரம், திரேஸ்புரம் ஜங்ஷன், புது தெரு, மட்டக்கடை, 2ஆம் கேட் போஸ் திடல், தேரடி, பள்ளிவாசல், பி.டி. எம்.டி. ஜங்ஷன், சுமங்கலி கல்யாண மண்டபம், பீங்கான் ஆபிஸ், பக்கில்புரம், கே.எஸ்.பி.எஸ். தியேட்டர், சிதம்பர நகர், பிரையண்ட் நகர் 12வது தெரு, 3ஆம் மைல், பழைய பஸ்டாண்டு, அண்ணாநகர் ஆகிய இடங்களில் கனிமொழி கருணாநிதி பிரச்சாரம் செய்தார்.

---

அவைத் தலைவர் சோ.துரைபாண்டியன் ஏற்பாட்டில் - நா.மாலதி தலைமையில் - கோவை

## 35வது வட்டம் - அண்ணா நகரில் 1000 பக்தர்களுக்கு குளிர்பானம்!

### கா.பொன்னரசு முன்னிலையில் ஆ.ரவிமுரசு ஒருங்கிணைப்பில் வழங்கல்!

கோவை, மார்ச் 26-

24.3.2024 அன்று காலை 10 மணி முதல் தொடர்ந்து ஒரு மணி வரை அறிஞர் அண்ணா நகர் நலச் சங்கத்தின் சார்பாகவும், கம்பீர சித்தி விநாயகர் திருக்கோயில் கமிட்டியின் ஒத்துழைப்புடன்,, கழக உடன்பிறப்புகள், சமூக ஆர்வலர்களின் துணையுடன், மருதமலை கோயிலுக்குச் செல்லும் பக்தர்களின் தண்ணீர் தாக்கத்தை போக்க, எலுமிச்சம் பழம் ஜூஸ் சுமார் 1000 பக்தர்களுக்கு மேல் வழங்கப்பட்டது.

வருடா வருடம் இந்த மாதிரி நிகழ்ச்சிகள் இத்தகைய தருணங்களில், நடைபயணம் செல்லும் பக்தர்களுக்கு, கழக உடன்பிறப்புகளும் இணைந்து தர்பூசணி, நீர்மோர், எலுமிச்சம் பழம் ஜூஸ் என வழங்குவர்.

பொதுமக்களுக்கு, நடைபயணம் செல்லும் பக்தர்களுக்கு சோர்வு ஏற்படாமல் புத்துணர்ச்சியுடன் பயணிக்க சமூக ஆர்வலர்கள் அனைவராலும் தீர்மா னிக்கப்பட்டு தொடர்ந்து வார வாரம் கோடைகாலத்தில் குளிர்பானங்கள் வழங்கப் பட உள்ளது.

இந்நிகழ்வில் 35 வது வட்டக் கழக அவை தலைவர்சோ.துரைப்பாண்டியன் ஏற்பாட்டில், கழக மாநில மகளிர் தொண்டரணி துணைச் செயலாளர் திருமதி மாலதி எலுமிச்சம் பழம் ஜூஸ் நடைபயணம் மேற்கொண்ட பக்தர்கள் அனைவருக்கும் வழங்கி தலைமை ஏற்று தொடங்கி வைக்க, பகுத்தறிவுப் பேரவை கழக அமைப்பாளர் மற்றும் கழக மூத்த முன்னோடியுமான கா. பொன்னரசு முன்னிலை வைக்க, கழக சொற்பொழிவாளர் ரவி முரசு ஒருங்கிணைப்பில், திருக்கோயில் கமிட்டியினரும் கழக உடன்பிறப்புகளும் சமூக ஆர்வலர்களும் நடை பயணம் மேற்கொண்ட பக்தர்களை வழியனுப்பி வைத்தனர்.

இதில் காவல் துணை ஆய்வாளர் ஓய்வு மதிவாணன், தியேட்டர் ராம்குமார், சந்திரலிங்கம், சலூன் கடை உரிமையாளர் பாலன், இ சர்வீஸ் மோகன் ராஜ், காவல் உதவி ஆய்வாளர் ஓய்வு, பரமேஸ்வரன், இளைஞர் அணி விக்னேஷ், ஆட்டோ நகர் வீரப்பன், கோவை லேப் சிவகுமார், ரியல் எஸ்டேட் ராதாகிருஷ்ணன், பெட்டிக்கடை சசிகுமார் மற்றும் திருமதி நளாயினி, திருமதி நவநீதம், தர்மராஜ், மார்க்கெட் தயாநந்தன், மாணிக்கம், லிங்கம், கோயில் அர்ச்சகர் மீதுல், கீதா ஆகியோர் கலந்து கொண்டனர்.



ஆத்தூரில் சேலம் கிழக்கு மாவட்ட காங்கிரஸ் கட்சி அலுவலகத்தில் கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற தொகுதி கழக வேட்பாளர் மலையரசனுக்கு கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.ஆர். சிவலிங்கம் ஆதரவு திரட்டினார். அப்போது கிழக்கு மாவட்ட காங்கிரஸ் தலைவர் அர்த்தனாரி, ஓசுமணி, தி.மு.க. மாவட்ட அவைத்தலைவர் கருணாநிதி, மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஏ.ஏ.ஆறுமுகம், தி.மு.க. நகர செயலாளர் பாலசுப்ரமணியம், சந்திரமோகன், நகர அவைத்தலைவர் மாணிக்கம் மற்றும் காங்கிரஸ் நிர்வாகிகள், தி.மு.க. நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

---

மயிலாடுதுறை வெங்கடேசன் - திருச்சி ஆரீப் மக்பூல் தலைமையில்

## சவுதி அரேபியாவில் இஃப்தார் நோன்பு திறப்பு நிகழ்ச்சி!

### கழக அயலக அணி - வெளிநாடு வாழ் தமிழர் இந்தியர்கள் நலச்சங்கம் சார்பில் நடைபெற்றது!

தம்மாம், மார்ச் 25

சவுதி அரேபியா தம்மாம் கிழக்கு மண்டல தி.மு.க. அயலக அணி மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் இந்தியர்கள் நலச் சங்கம் ஒருங்கிணைந்து கடந்த 23-03- 2024 அன்று மாலை தமிழர்கள் ஒன்று கூடிய இஃப்தார் நிகழ்ச்சி தம்மாம் ஜாய்கா ரெஸ்டாரன்டில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் வெளிநாடு வாழ் தமிழர் இந்தியர்கள் நலச்சங்க கிளைகளின் ஒருங்கிணைப்பாளர் முகவை சீனி முகம்மது, பொருளாளர் துறையூர் கமால் இணைந்து ஒருங்கிணைத்தார்கள்.

தி.மு.க. மூத்த உறுப்பினர் ஏ.எஸ்.டி. சிவக்குமார் மற்றும் கள்ளக்குறிச்சி ஃபாருக் மற்றும் திருச்சி யூனுஸ் சிறப்புரையாற்றி னார்.

இந்நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக யுனிவர்சல் நிறுவனத்தைச் சேர்ந்த தொழிலதிபர் பக்ருதீன் அப்துல் மஜீத் கலந்து கொண்டார். பல்வேறு வினாடி வினா நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் வெற்றி பெற்ற 12 நபர்களுக்குப் பரிசளிக்கப்பட்டது.

சவுதி அரேபியா அயலக அணி செயலாளர் அபூரயான் என்னும் ஆசிப் நன்றியுரை ஆற்றினார்.

மேலும் கேரளா அமைப்பிலிருந்து நாசு சவுக்கத் அலி, ஏர்போர்ட் கணேசன், சென்னை இம்ரான், யூனுஸ், சென்னை ஜியா, அப்துல் ரஹ்மான், ரிஷி உணவகம் ஷாஹுல், முகவை யாசர், முகவை சபிக், ஆசிரியை ஃபரீதா, சென்னை அக்பர், மாணவன் அமீரா உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.



இந்தியா கூட்டணியின் சிவகங்கை நாடாளுமன்ற தொகுதியின் காங்கிரஸ் வேட்பாளர், கார்த்தி சிதம்பரம் சுற்றுச்சூழல் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதனைச் சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் புதுக்கோட்டை தெற்கு மாவட்ட காங்கிரஸ் தலைவர் இராம. சுப்புராம் உள்ளார்.



கள்ளக்குறிச்சியில் நடைபெற்ற தி.மு.க. தலைமையிலான இந்தியா கூட்டணியின் செயல்வீரர்கள் கூட்டத்தில் அமைச்சர் எ.வ.வேலு வேட்பாளர் மலையரசனை அறிமுகப்படுத்தி பேசினார், அருகில் கள்ளக்குறிச்சி தெற்கு மற்றும் வடக்கு மாவட்டச் செயலாளர்கள் வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ., தா.உதயசூரியன் எம்.எல்.ஏ., சேலம் கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ். ஆர்.சிவலிங்கம், தொகுதி பொறுப்பாளர்கள் ஆ.மாசிலாமணி, ஏ.ரியா, செஞ்சி கூட்டணி கட்சி மாவட்ட நிர்வாகிகள் மற்றும் தி.மு.க. மாவட்ட ஒன்றிய, நகர, பேரூர், கழக நிர்வாகிகள், ஆகியோர்கள் உள்ளனர்.


‘இந்தியா’ கூட்டணியின் விழுப்புரம் தொகுதி வெற்றி வேட்பாளர் முனைவர் து.ரவிக்குமாரை அறிமுகம் செய்யும் கூட்டம் மற்றும் விழுப்புரம், விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதி செயல்வீரர்கள் ஆலோசனைக் கூட்டம் விழுப்புரம், கலைஞர் அறிவாலயம், தளபதி அரங்கில் உயர்கல்வித் துறை அமைச்சர் க.பொன்முடி தலைமையில் நடைபெற்றது. மாவட்டக் கழகச் செயலாளர் நா.புகழேந்தி எம்.எல்.ஏ. வரவேற்க மாநில விளையாட்டு மேம்பாட்டு அணி துணைச் செயலாளர் டாக்டர். பொன். கௌதமசிகாமணி எம்.பி., இரா.இலட்சுமணன் எம்.எல்.ஏ. ம.ஜெயச்சந்திரன், இரா.ஜனகராஜ், செ.புஷ்பராஜ், அன்னியூர் சிவா, வி.சி.க. வன்னியரசு, இந்திய கம்யூனிஸ்ட் ஏ.வி. சரவணன், காங்கிரஸ் குலாம் மொய்தீன், இந்தியன் யூனியன் முஸ்லிம் லீக் கட்சி அமீர் அப்பாஸ், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் சவுரி ராஜன், தமிழக வாழ்வுரிமைக் கட்சி குமரன், தயா. இளந்திரையன், எம்.தேன்மொழி, ஷீலாதேவி சேரன், இரா. சக்கரை, தமிழ்ச்செல்வி பிரபு, ஆர்.எஸ். வாசன், க.மும்மூர்த்தி, பி. தெய்வசிகாமணி, தே.முருகவேல், கல்பட்டு வி.ராஜா மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### கள்ளக்குறிச்சி நாடாளுமன்றத் தொகுதி தி.மு.க. வேட்பாளரை

# தமிழ்நாட்டிலே அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்ய வேண்டும்!

## கள்ளக்குறிச்சியில் வேட்பாளர் அறிமுகக் கூட்டம் - செயல் வீரர்கள் கூட்டத்தில் அமைச்சர் எ.வ.வேலு பேச்சு!

கள்ளக்குறிச்சி, மார்ச் 26-

கள்ளக்குறிச்சி நாடாளுமன்றத் தொகுதி தி.மு.க. தலைமையிலான ‘இந்தியா’ கூட்டணியின் தி.மு.க. வேட்பாளர் தே.மலையரசன் அறிமுகம் மற்றும் செயல்வீரர்கள் கூட்டம் கள்ளக்குறிச்சி கலைஞர் திடலில் நடைபெற்றது, கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் தா. உதயசூரியன் எம்.எல்.ஏ. தலைமை தாங்கினார். தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் வசந்தம் கா. கார்த்திகேயன் எம்.எல்.ஏ., சேலம் கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

சிறப்பு அழைப்பாளராக பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் அமைச்சரும், மாவட்டத்தின் பொறுப்பு அமைச்சருமான எ.வ.வேலு கலந்துகொண்டு வேட்பாளர் மலையரசனை அறிமுகப்படுத்தி பேசுகையில், கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற தொகுதி தி.மு.க. வேட்பாளர் ஒரு சாதாரண தொண்டனுக்கு போட்டியிட வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது, இவர் மாவட்ட செயலாளரும் அல்லது மாநில பொறுப்பாளரோ இல்லை, சாதாரணமான ஊராட்சி மன்றத் தலைவராக பொது வாழ்வை தொடங்கியுள்ளார், ஒரு ஊராட்சி மன்றத் தலைவராக இருந்தவர் தி.மு.க. வேட்பாளராக இருக்கிறார் என்று சொன்னால் அதற்கு தமிழ்நாடு முதலமைச்சர் - கழகத் தலைவர் சமூக நீதி காவலர், திராவிட நாயகர் மு.க.ஸ்டாலினுக்கு மாவட்ட மக்கள் சார்பில் நன்றி தெரிவிக்க வேண்டும்.

கடந்த 2019 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் நம்மை எதிர்த்து நின்றவர்கள் இரண்டாகப் பிரிந்து விட்டார்கள், அவர்கள் ஒன்றாக இருந்தபோது 3 லட்சத்து 99 ஆயிரத்து 919 ஓட்டு வித்தியாசத்தில் தி.மு.க. வெற்றி பெற்றது, மேலும் கழகத் தலைவர் - தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் நல்லாட்சியில் மக்களுக்குத் தேவையான எண்ணற்ற திட்டங்களை செயல்படுத்தியுள்ளார், அந்த திட்டங்களையும் நமது கழக அரசின் சாதனைகளையும் கிராமம் கிராமமாக வீதி வீதியாக வீடு வீடாகச் சென்று பொதுமக்களிடத்தில் எடுத்துக் கூறி சிந்தாமல் சிதறாமல் உதயசூரியன் சின்னத்திற்கு நாம் வாக்குகள் சேகரிக்க வேண்டும், ஆகவே நமது வேட்பாளர் மலையரசன் ஒரு சாதாரண தொண்டன். அவரை தமிழ்நாட்டிலே அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற செய்ய வேண்டும் அதற்கு நீங்கள் அயராமல் கடுமையாக இரவு பகல் பாராமல் நாம் அனைவரும் ஒன்றிணைந்து ஒற்றுமையுடன் கருத்து வேறுபாடு பார்க்காமல் எந்த ஒரு சலசலப்புக்கும் அஞ்சாமல் அரும்பாடு பட வேண்டும் என்று பேசினார்.

இதில் மாநில மகளிர் அணி துணைச் செயலாளர் ஆ.அங்கையற்கண்ணி, சட்டமன்றத் தொகுதி பொறுப்பாளர்கள் ஆர்.மாசிலாமணி, ஏ.ரியா, செஞ்சி சிவா, காங்கிரஸ் கட்சி மாவட்டத் தலைவர் எஸ்.ஜெய்கணேஷ், ம.தி.மு.க. மாவட்டச் செயலாளர் க.ஜெய்சங்கர், இந்திய கம்யூனிஸ்ட் மாவட்டச் செயலாளர் கே.ராமசாமி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மாவட்டச் செயலாளர் டி.எம்.ஜெய்சங்கர், வி.சி.க. மாவட்டச் செயலாளர்கள் ஆர்.மதியழகன், சேந்தநாடு அறிவுக்கரசு,

வேல்.பழனியம்மாள், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் மாவட்ட செயலாளர் டி.ரஷித்கான், மூவேந்தர் முன்னேற்ற கழக மாவட்டச் செயலாளர் சே.தினேஷ் மக்கள் நீதி மையம் மாவட்டச் செயலாளர் முத்தமிழ் கணேஷ், சமத்துவ மக்கள் கழகம் மாவட்டச் செயலாளர் கே.முருகன், கொ.நா.ம. தே.க கே.ஆர்.வேலு முருகன், த.நா.க.தொ.சங்கம் கே.வெங்கடேசன் உள்பட ஏராளமான கூட்டணி கட்சி நிர்வாகிகள், மாவட்ட ஒன்றிய நகர பேரூர் கிளைக் கழக நிர்வாகிகள் மற்றும் மகளிர் அணியினர் தொண்டர் அணியினர் இளைஞர் அணியினர் தகவல் தொழில்நுட்ப அணியினர் உள்பட பல கலந்து கொண்டனர்.

இறுதியாக கள்ளக்குறிச்சி நகர மன்ற தலைவரும், நகர கழக செயலாளருமான ஆர்.சுப்பராயலு நன்றி கூறினார்.

# தமிழ்நாட்டில் பா.ஜ.க. வேட்பாளர்களை டெபாசிட் இழக்கச் செய்ய வேண்டும்!

## தூத்துக்குடி செயல்வீரர்கள் கூட்டத்தில் கனிமொழி கருணாநிதி எம்.பி. பேச்சு!

தூத்துக்குடி, மார்ச்.26-

“ஒரு தொகுதியில் கூட பா.ஜனதா 2வது இடத்திற்கு வந்துவிடக்கூடாது” என்று கனிமொழி கருணாநிதி எம்.பி. கூறினார்.

**செயல்வீரர்கள் கூட்டம்**

தூத்துக்குடி நாடாளுமன்ற தொகுதியில் தி.மு.க. சார்பில் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் மீண்டும் போட்டியிடுகிறார். இவரது வெற்றிக்காக திருச்செந்தூர், திருவைகுண்டம், ஓட்டப்பிடாரம் ஆகிய 3 சட்டசபை தொகுதிகள் அடங்கிய கட்சியின் செயல்வீரர்கள் கூட்டம் உடன்குடி அருகே உள்ள தண்டுபத்து பகுதியில் நடை பெற்றது.



இதில் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் கலந்து கொண்டு பேசியதாவது:

தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தூத்துக்குடி தொகுதியில் 2-வது முறையாக போட்டியிடுவதற்கு எனக்கு ஒரு வாய்ப்பு கொடுத்து உள்ளார். அதனால் நான் மீண்டும் தூத்துக்குடியில் போட்டியிடுகிறேன்.

**பா.ஜ.க. 2வது இடத்திற்கு வரக்கூடாது**

தமிழ்நாட்டில் பேரிடர் நிகழ்ந்தபோது ஒருமுறை கூட வந்து பிரதமர் மோடி பார்க்கவில்லை. வியாபாரிகள், விவசாயிகள், கூலித்தொழிலாளர்கள் என பல்வேறு தரப்பு மக்கள் பாதிக்கப்பட்டபோதும் வரவில்லை. ஆனால் தேர்தலுக்காக பல முறை வந்து சென்று விட்டார். இன்னும் வருவதாகச் சொல்லி உள்ளார். தேர்தலில் வெற்றி பெற வேண்டும் என்பதற்காக தங்களை எதிர்த்தவர்களைக் கைது செய்து மிரட்டி வருகின்றனர்.

ஆனால், தமிழ்நாட்டு மக்களை யாரும் எளிதில் ஏமாற்ற முடியாது. தமிழ்நாட்டில் பா.ஜனதா வேட்பாளர்களை டெபாசிட் இழக்க செய்ய வேண்டும். அவர்கள் ஒரு தொகுதியில் கூட 2வது இடத்திற்கு வந்துவிடக்கூடாது.

தமிழ்நாடு, புதுச்சேரியில் உள்ள 40 தொகுதிகளிலும் தி.மு.க. கூட்டணி மகத்தான வெற்றிபெறும். நீங்கள் அனைவரும் எனக்கு வாக்களித்து மீண்டும் என்னை தேர்வு செய்ய வேண்டும்.

இவ்வாறு கனிமொழி கருணாநிதி அவர்கள் கூறினார்.

# கெஜ்ரிவாலைக் கண்டு பா.ஜ.க.வுக்கு அச்சம்!

## பஞ்சாப் முதல்வர் பகவந்த் மான் பேட்டி!

டெல்லி, மார்ச் 26-

டெல்லி முதல்வர் கெஜ்ரிவாலைக் கண்டு பா.ஜ.க. அச்சமடைந்து உள்ளதாக பஞ்சாப் முதல்வர் பகவந்த் மான் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து செய்தி நிறுவனம் ஒன்றிற்கு அவர் அளித்த பேட்டியில், கெஜ்ரிவால் கைது செய்யப்படுவார் என்று நாங்கள் ஆரம்பத்திலிருந்தே கூறி வருகிறோம். கெஜ்ரிவால் போன்ற பெரிய தலைவர் பிரசாரம் செய்வதை அவர்கள் (பாஜக) விரும்பவில்லை. மக்களவைத் தேர்தலில் கெஜ்ரிவால் பிரசாரம் செய்வதைத் தடுக்கவே அவரை ஒன்றிய பாஜக அரசு கைது செய்துள்ளது.

அவரைப் பார்த்து பாஜக பயப்படுகிறது. எனவேதான், அவரையும் ஆம் ஆத்மி கட்சியையும் அழிக்க விரும்புகிறார்கள். அரசியல் ரீதியால் பழிவாங்கும் நோக்குடனேயே கெஜ்ரிவால் மீது அமலாக்கத்துறை வழக்கு தொடர்ந்துள்ளது. ஏற்கெனவே கைது செய்யப்பட்டுள்ள சரத் ரெட்டி, கெஜ்ரிவாலைச் சந்திக்கவே இல்லை என்று முதலில் கூறியிருந்தார்.

சிறையில் விசாரணை நடத்தியபோது கெஜ்ரிவாலை சந்தித்து உள்ளதாக சரத் ரெட்டி கூறியுள்ளார். தற்போது தேர்தல் பத்திரங்கள் மூலம் பாஜகவுக்கு சரத் ரெட்டி ரூ.55 கோடி கொடுத்திருப்பது அம்பலமாகி உள்ளது. கெஜ்ரிவாலுக்கு எதிரான விசாரணை அமைப்பின் குற்றச்சாட்டுகள் உண்மையற்றவை மற்றும் நிரூபிக்கப்படாதவை.

இவ்வாறு பஞ்சாப் முதல்வர் பகவந்த் மான் குறிப்பிட்டுள்ளார்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆட்சியில் 34 மாதங்களில்

# 1500 கோவில்களில் குடமுழுக்கு நடைபெற்றுள்ளது!

## இந்து சமய அறநிலையத்துறை அபார சாதனை!

சென்னை, மார்ச் 26-

தி.மு.க. தலைமையிலான ஆட்சி அமைந்த பிறகு இந்து சமய அறநிலையத்துறையின் செயல்பாடுகள் வேகமெடுத்து உள்ளன. அமைச்சர் பி.கே. சேகர்பாபுவின் வழிகாட்டுதலின் பேரில் பல கோவில்களுக்கு சொந்தமான சொத்துக்கள், இடங்கள் மீட்கப்பட்டுள்ளன.

மேலும் தமிழர்களின் கலை, பண்பாடு, கலாசாரத்தை பேணிக்காக்கும் சிறப்புமிக்க பெட்டகங்களாக திகழும் தொன்மையான கோவில்களை அதன் பழமை மாறாமல் திருப்பணிகள் மேற்கொண்டு புதுப்பித்து கும்பாபிஷேகம் நடத்தி இந்து சமய அறநிலையத்துறை மகத்தான சாதனை புரிந்து வருகிறது.



தி.மு.க. ஆட்சி அமைந்த கடந்த 34 மாதங்களில் இந்து சமய அறநிலையத்துறை சார்பில் இன்றுவரை 1500 கோவில்களில் கும்பாபிஷேகம் நடத்தப்பட்டு உள்ளது. இந்து சமய அறநிலையத்துறை நடத்திய 1500வது கும்பாபிஷேக விழா கோவை கிணத்துக்கடவு அருகே முத்தூரில் உள்ள ஸ்ரீவன்னி குமாரசுவாமி கோவிலில் இன்று நடந்தது. தமிழில் வேத மந்திரங்கள் முழங்க நடைபெற்ற இந்த கும்பாபிஷேக விழாவில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு தரிசனம் செய்தனர்.

கடந்த 34 மாதங்களில் 1500 கோவில்களில் கும்பாபிஷேகம் நடைபெற்றிருப்பது இந்து சமய அறநிலையத்துறையின் அபார சாதனை ஆகும். இதில் பல பழமையான கோவில்களுக்கும் கும்பாபிஷேகம் நடந்து உள்ளன. இப்படி பழமையான கோவில்களை தேடிக்கண்டுபிடித்து அமைச்சர் பி.கே.சேகர்பாபு அவற்றை சீரமைத்து கும்பாபிஷேகம் நடத்தி வருகிறார். இந்து கோவில்களை சீரமைக்கும் வகையில் அவரது நடவடிக்கை அமைந்திருப்பதை பக்தர்கள் பாராட்டி வரவேற்றுள்ளனர்.

அவரது நடவடிக்கையின் காரணமாக 400 ஆண்டுகளுக்கு பிறகு கன்னியாகுமரி மாவட்டம் திரு வட்டார் ஆதி கேசவ பெருமாள் கோவிலில் கும்பாபி ஷேகம் நடந்துள்ளது. 300 ஆண்டுகளுக்கு பிறகு காஞ்சீபுரம் மாவட்டம் சாத்த னஞ்சேரி கரிய மாணிக்க வரதராஜ பெருமாள் கோவிலிலும், 150 ஆண்டுகளுக்கு பிறகு ராணிப்பேட்டை மாவட்டம் தக்கோலம் கங்காதீசுவரர் கோவிலிலும், 123 ஆண்டுகளுக்கு பிறகு திருநெல் வேலி மாவட்டம் அரிகேசவநல்லூர் பெரியநாயகி சமேத அரியநாதசாமி கோவிலிலும், 110 ஆண்டுகளுக்கு பிறகு வேலூர் மாவட்டம் வெட்டு வானம் திரவுபதி அம்மன் கோவிலிலும் கும்பாபிஷேகம் நடந்துள்ளது.

மேலும் தமிழகத்தில் 100 ஆண்டுகளுக்கு பிறகு 5 கோவில்களிலும், 70 ஆண்டுகளுக்குப் பிறகு 6 கோவில்களிலும், 50 ஆண்டுகளுக்கு பிறகு 15 கோவில்களிலும், 30 ஆண்டுகளுக்கு பிறகு 15 கோவில்களிலும் வெகு விமரிசையாக கும்பாபிஷேகம் நடத்தப்பட்டு உள்ளது.

### நாடாளுமன்றத் தேர்தல் - 2024

# மக்கள் நீதி மய்யம் கட்சித் தலைவர் கமல்ஹாசன்

## ‘இந்தியா’ கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தேர்தல் பிரச்சாரம்!



2024 ஏப்ரல் - 19 அன்று நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலையொட்டி, மக்கள் நீதி மய்யம் கட்சித் தலைவர் கமல்ஹாசன் அவர்கள் இந்தியா கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்குகள் சேகரிக்கிறார். அதன் விவரம் பின்வருமாறு:

| தேதி | | நாடாளுமன்ற தொகுதி |
|---|---|---|
| 29.03.2024 (வெள்ளிக்கிழமை) | - | ஈரோடு |
| 30.03.2024 (சனிக்கிழமை) | - | சேலம் |
| 02.04.2024 (செவ்வாய் கிழமை) | - | திருச்சி |
| 03.04.2024 (புதன் கிழமை) | - | சிதம்பரம் |
| 06.04.2024 (சனிக் கிழமை) | - | சென்னை, திருபெரும்புதூர் |
| 07.04.2024 (ஞாயிற்றுக்கிழமை) | - | சென்னை |
| 10.04.2024 (புதன் கிழமை) | - | மதுரை |
| 11.04.2024 (வியாழக் கிழமை) | - | தூத்துக்குடி |
| 14.04.2024 (ஞாயிற்றுக் கிழமை) | - | திருப்பூர் |
| 15.04.2024 (திங்கட் கிழமை) | - | கோவை |
| 16.04.2024 (செவ்வாய்க் கிழமை) | - | பொள்ளாச்சி |


திருவண்ணாமலை நகரம் பைபாஸ் சாலையில் நேற்று முன்தினம் மாலை 5.30 மணிக்கு பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் வாகனத்தை தேர்தல் பறக்கும் படையினர் வாகன சோதனை நடத்தினர்.


புதுக்கோட்டை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லப்பாண்டியன் தலைமையில் இந்தியா கூட்டணி கரூர் நாடாளுமன்றத் தொகுதி காங்கிரஸ் வேட்பாளர் செ.ஜோதிமணி கை சின்னத்திற்கு வாக்குகள் சேகரிக்கும் பணியினை விராலிமலையில் மேற்கொண்டார். நிகழ்வில் காங்கிரஸ் மாவட்டத் தலைவர் முருகேசன், விடுதலைச் சிறுத்தைகள் மாவட்டச் செயலாளர் வெள்ளை நெஞ்சன், மாநில விவசாய அணி துணைச் செயலாளர் கே ஆர்.என்.போஸ், சி.பி.ஐ. தர்மராஜ், தி.மு.க. ஒன்றியச் செயலாளர்கள் மு.பி.ம.சத்தியசீலன், ஆர்.ஆர்.எஸ்.மாரிமுத்து, அ.இளங்குமரன், கே.பி.அய்யப்பன், ஓ.எஸ்.வெங்கடாசலம், இலுப்பூர் பேரூர் செயலாளர் வை.விஜயகுமார், டாக்டர். செ.குறிஞ்சிவாணன், எஸ்.வி.ஆர்.ஸ்டாலின்ராஜா, தமிழினியன், ராதா, ராஜேஷ், முத்தழகு, ராஜா பழனிவேல், நந்தினி, அபிராமி எட்வின் ஜோ, உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



விழுப்புரம் நாடாளுமன்றத் தொகுதிக்கு உட்பட்ட திண்டிவனம் சட்டமன்றத் தொகுதி சார்பில் திண்டிவனத்தில் நடைபெற்ற நிர்வாகிகள் அறிமுகக் கூட்டத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்டச் செயலாளரும், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சருமான செஞ்சி மஸ்தான் 'இந்தியா' கூட்டணிவிடுதலைச் சிறுத்தைகள் கட்சியின்விழுப்புரம் தொகுதி வேட்பாளர்துரை ரவிக்குமாரை அறிமுகம் செய்து வைத்து சிறப்புரை ஆற்றினார். உடன்முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் சீத்தாபதி சொக்கலிங்கம், செந்தமிழ் செல்வன், விடுதலை சிறுத்தைகள் கட்சியின் மாநில பொதுச் செயலாளர் வன்னியரசு, மாவட்ட அவைத் தலைவர் டாக்டர் சேகர், மாவட்ட பொருளாளர் ரமணன், நகரச் செயலாளர் கண்ணன், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் மாவட்ட செயலாளர்கள் திலீபன், மலைச்சாமி உள்ளிட்ட தி.மு.க. தோழமைக் கட்சி நிர்வாகிகள் உள்ளனர்.



புதுக்கோட்டை தெற்கு மாவட்டம் திருமயத்தில் ஒன்றிய தி.மு.க. அலுவலகத்தை சட்டத்துறை அமைச்சரும், புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளருமான எஸ்.ரகுபதி திறந்து வைத்தார். உடன் மாவட்ட அவைத் தலைவர் ஏ.எல்.சுப்பிரமணியன். ஒன்றிய செயலாளர்கள். ஆறு.சிதம்பரம், ஆர்.கணேசன், பொன்.ராமலிங்கம், வி.ஜர்.இளையராஜா, அ.முத்து மற்றும் முன்னாள் ஒன்றிய செயலாளர் ஆர்.எம். கருப்பையா, மேகநாதன், கே.ஆர்.ராமசாமி உள்ளிட்ட மாவட்ட ஒன்றிய நிர்வாகிகள் மற்றும் மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் ஏராளமானவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# பிரதமர் மோடி நசுக்குவதற்கு தி.மு.க. என்ன பொட்டுப் பூச்சியா?

## கழகப் பொதுச் செயலாளர் - அமைச்சர் துரைமுருகன் ஆவேசம்!



வேலூர், மார்ச் 26 -

இந்தியா கூட்டணி சார்பில் போட்டியிடும் வேலூர் நாடாளுமன்றத் தொகுதி தி.மு.க. வேட்பாளர் டி.எம். கதிர் ஆனந்த் அறிமுகம் மற்றும் செயல்வீரர்கள் கூட்டம் ஆம்பூர் எம்.சி.ரோட்டில் நடைபெற்றது. இதில் தி.மு.க. பொதுச்செயலாளரும், நீர்வளத் துறை அமைச்சருமான துரை முருகன், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு ஆகியோர் பங்கேற்று வேட்பாளர் டி.எம்.கதிர்ஆனந்தை அறிமுகம் செய்து வைத்தனர்.

பின்னர், அமைச்சர் எ.வ.வேலு பேசுகையில், "சி.ஏ.ஏ. சட்டம் வருவதற்கு எடப்பாடி பழனிசாமி வகையறாதான் காரணம். ஏ.சி.சண்முகம் கடந்த காலங்களில் வேலூர் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தபோது ஏதாவது நல்லது செய்திருக்கிறாரா? அவர் அல்வா கொடுப்பதில் வல்லவர்" என்றார்.

இதில் கழகப் பொதுச் செயலாளர் அமைச்சர் துரைமுருகன் அவர்கள் பேசுகையில், "இந்த இயக்கத்தை யாரும் அழித்து விட முடியாது. மோடி மீண்டும் ஆட்சிக்கு வந்தால் தி.மு.க.வையும் அதன் கூட்டணிக் கட்சிகளையும் சுக்குநூறாக ஆக்குவேன், நசுக்கி விடுவேன் எனச் சொன்னார்.

இப்படியா ஒரு பிரதமர் பேசுவது? தி.மு.க. என்ன பொட்டு பூச்சியா அழித்து விடுவதற்கு. தி.மு.க.வை எந்த கொம்பனாலும் அழிக்க முடியாது. தியாகத்தால் உருவான கட்சி இது".

இவ்வாறு அவர் கூறினார்.

### விழுப்புரம் தொகுதியில் போட்டியிடும் கூட்டணி கட்சி வேட்பாளர்

# துரை ரவிக்குமாரை அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்வோம்!

## திண்டிவனத்தில் நடைபெற்ற கூட்டத்தில் அமைச்சர் செஞ்சி மஸ்தான் பேச்சு!

திண்டிவனம், மார்ச் 26 -

விழுப்புரம் வடக்கு மாவட்டம் விழுப்புரம் நாடாளுமன்றத் தொகுதிக்கு உட்பட்ட திண்டிவனம் தொகுதியில் தி.மு.க. நிர்வாகிகள் அறிமுக கூட்டம் திண்டிவனத்தில் நடைபெற்றது.

விழுப்புரம் வடக்கு மாவட்ட பொருளாளரும் திண்டிவனம் சட்டமன்றத் தொகுதி பொறுப்பாளருமான ரமணன் தலைமை தாங்கினார் மாவட்டத் துணைச் செயலாளர் ரவிக்குமார், ஒன்றிய செயலாளர்கள் தயாளன்,பழனி, ரவிச்சந்திரன், சொக்கலிங்கம், திண்டிவனம் நகர செயலாளர் கண்ணன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற கூட்டத்தில் சிறுபான்மை யினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு விழுப்புரம் நாடாளுமன்ற தொகுதி வேட்பாளர் துரை ரவிக்குமாரை அறிமுகம் செய்து வைத்து சிறப்புரை ஆற்றினார்.

அப்போது நிகழ்ச்சியில் பேசிய அமைச்சர் செஞ்சி மஸ்தான்:

திராவிட மாடல் அரசு பொறுப்பேற்ற 33 மாதம் ஆட்சியில் தமிழ்நாடு முதலமைச்சர் எண்ணற்ற பல திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி கொண்டு வருகிறார் முதலமைச்சரின் இத்திட்டங்களை தி.மு.க.வினர் இல்லந்தோறும் கொண்டு சென்று பெண்களிடம் எடுத்துக் கூறி வாக்கு சேகரிக்க வேண்டும்.

மத்தியில் ஆளும் பா.ஜ.க. பாசிச ஆட்சியை வீழ்த்தி முதலமைச்சர் தலைமையிலான ஜனநாயக ஆட்சியை இந்தியாவில் கொண்டு வருவதற்கு தி.மு.க.வினர் கடுமையாக உழைக்க வேண்டும். தி.மு.க.வினரின் கடுமையான உழைப்பால் விழுப்புரம் நாடாளுமன்ற தொகுதியில் உள்ளடங்கிய திண்டிவனம் சட்டமன்றத் தொகுதியில் கூட்டணி கட்சி சார்பில் போட்டியிடும் துரை ரவிக்குமார் சுமார் ஒரு லட்சம் வாக்குகள் கூடுதலாக பெற்று வெற்றி பெற வேண்டும்.

தமிழ்நாடு முதலமைச்சரின் அறிவுறுத்தலின்படி விழுப்புரம் நாடாளுமன்ற தொகுதியில் இரண்டாவது முறையாக போட்டியிடும் கூட்டணி கட்சியின் வேட்பாளர் துரை ரவிக்குமார் அவர்களை நமது கட்சியின் வேட்பாளராகவே கருத வேண்டும் எனவே வேட்பாளரை நாம் தத்தெடுத்து கொண்டு விடுதலை சிறுத்தைகள் கட்சியினரை நமது தி.மு.க. கட்சியினராக எண்ணி வெற்றி பெறுவதற்காக கடுமையாக உழைக்க வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டார்.

கூட்டத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் சீத்தாபதி சொக்க லிங்கம்,செந்தமிழ்ச்செல்வன், விடுதலைச் சிறுத்தை கள் கட்சியின் மாநில பொதுச் செயலாளர் வன்னி யரசு, மாவட்ட அவைத்தலைவர் டாக்டர் சேகர், விடுதலைச் சிறுத்தை கள் கட்சியின் மாவட்டச் செய லாளர்கள் திலீபன், மலைச்சாமி,உள்ளிட்ட தி.மு.க. தோழமைக் கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### நாடாளுமன்றத் தேர்தல் - 2024

# தி.மு.க. துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி, எம்.பி., தேர்தல் பிரச்சாரம்!

## தலைமைக் கழகம் அறிவிப்பு



2024 ஏப்ரல்-19 அன்று நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலையொட்டி, தி.மு.க. துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி, எம்.பி., அவர்கள் இந்தியா கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்குச் சேகரிக்கிறார். அதன் விவரம் பின்வருமாறு :

| தேதி | நாடாளுமன்றத் தொகுதி |
|---|---|
| 28.03.2024 (வியாழக் கிழமை) | - கரூர்<br>ஈரோடு |
| 29.03.2024 (வெள்ளிக்கிழமை) | - கோவை<br>பொள்ளாச்சி |
| 01.04.2024 (திங்கட் கிழமை) | - திருநெல்வேலி<br>தென்காசி |
| 02.04.2024 (செவ்வாய்க் கிழமை) | - கன்னியாகுமரி |
| 04.04.2024 (வியாழக் கிழமை) | - மதுரை<br>தேனி |
| 08.04.2024 (திங்கட் கிழமை) | - சென்னை தெற்கு |

**"அண்ணா அறிவாலயம்"**
'சென்னை-18.
நாள் : 24.3.2024.

**தலைமைக் கழகம்,**
தி.மு.க.






## 2024 நாடாளுமன்றத் தேர்தல் 'இந்தியா கூட்டணி' வேட்பாளர்களை ஆதரித்து

கலைஞர் 100 1924 - 2023

# கழக இளைஞர் அணிச் செயலாளர் பிரச்சாரம்

2024 ஏப்ரல் 19–அன்று நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலையொட்டி கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 'இந்தியா கூட்டணி' வேட்பாளர்களை ஆதரித்து, தமிழ்நாடு முழுவதும் தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்குகள் சேகரிக்கிறார்.

கழக இளைஞர் அணிச் செயலாளர் அவர்கள் மேற்கொள்ளும் தேர்தல் பிரச்சார சுற்றுப்பயண விவரம் வருமாறு:–

**26-03-2024, செவ்வாய்க்கிழமை**

| | | | |
|---|---|---|---|
| 1 | காலை 10.00 மணி | காந்தி சிலை சந்திப்பு, திருவண்ணாமலை, திருவண்ணாமலை தெற்கு மாவட்டம். | திருவண்ணாமலை |
| 2 | காலை 10.45 மணி | பேருந்து நிலையம் அருகில், கூட்ரோடு, இறையூர், கலசப்பாக்கம், திருவண்ணாமலை தெற்கு மாவட்டம். | திருவண்ணாமலை |
| 3 | காலை 11.45 மணி | அம்பேத்கர் சிலை அருகில், செங்கம், திருவண்ணாமலை தெற்கு மாவட்டம். | திருவண்ணாமலை |
| 4 | மதியம் 12.30 மணி | பழைய பேருந்து நிலையம் அருகில், திருப்பத்தூர், திருப்பத்தூர் மாவட்டம். | திருவண்ணாமலை |
| மதிய உணவு இடைவேளை | | | |
| 5 | மாலை 5.00 மணி | ரயில்வே சந்திப்பு அருகில், கோடியூர், ஜோலார்ப்பேட்டை, திருப்பத்தூர் மாவட்டம். | திருவண்ணாமலை |
| 6 | மாலை 5.45 மணி | பேருந்து நிலையம் அருகில், வாணியம்பாடி, திருப்பத்தூர் மாவட்டம். | வேலூர் |
| 7 | இரவு 6.30 மணி | ராஜீவ் காந்தி சிலை அருகில், பைபாஸ் சாலை, ஆம்பூர், திருப்பத்தூர் மாவட்டம். | வேலூர் |
| 8 | இரவு 7.30 மணி | பேருந்து நிலையம் அருகில், பேர்ணாம்பட்டு, வேலூர் மாவட்டம். | வேலூர் |
| 9 | இரவு 8.15 மணி | பேருந்து நிலையம் அருகில், குடியாத்தம், வேலூர் மாவட்டம். | வேலூர் |
| 10 | இரவு 9.00 மணி | பிரதான சாலை, பள்ளிகொண்டா, வேலூர் மாவட்டம். | வேலூர் |
| 11 | இரவு 9.30 மணி | மண்டித் தெரு, வேலூர், வேலூர் மாவட்டம். | வேலூர் |

**27-03-2024, புதன்கிழமை**

| | | | |
|---|---|---|---|
| 1 | காலை 10.00 மணி | பேருந்து நிலையம், ஆற்காடு, இராணிப்பேட்டை மாவட்டம். | அரக்கோணம் |
| 2 | காலை 10.45 மணி | முத்துக்கடை பேருந்து நிலையம், இராணிப்பேட்டை மாவட்டம். | அரக்கோணம் |
| 3 | காலை 11.30 மணி | பேருந்து நிலையம் அருகில், வாலாஜா, இராணிப்பேட்டை மாவட்டம். | அரக்கோணம் |
| 4 | மதியம் 12.30 மணி | பேருந்து நிலையம் அருகில், சோளிங்கர் இராணிப்பேட்டை மாவட்டம். | அரக்கோணம் |
| மதிய உணவு இடைவேளை | | | |
| 5 | மாலை 5.00 மணி | கமலா திரையரங்கம் அருகில், திருத்தணி, திருவள்ளூர் மேற்கு மாவட்டம். | அரக்கோணம் |
| 6 | மாலை 6.00 மணி | பழைய பேருந்து நிலையம் அருகில், அரக்கோணம், இராணிப்பேட்டை மாவட்டம். | அரக்கோணம் |
| 7 | மாலை 7.30 மணி | மணிக்கூண்டு, ஸ்ரீபெரும்புதூர், காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம். | திருப்பெரும்புதூர் |



அன்பகம்
சென்னை – 18.
நாள் : 22–03–2024.



ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சி ஒன்றியம் ஈஞ்சம்பள்ளி பஞ்சாயத்துக்கு உட்பட்ட தானத்துபாளையம், நேரு நகர், கீரமடை பொன்னம்பாளையம், க.மின்னம்பாளையம், முத்துகவுண்டன் பாளையம் ஆகிய பகுதிகளில் உள்ள பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த நிர்வாகிகள் பஞ்சாயத்து தலைவர் மாயவன் தலைமையில் ஈரோடு தெற்கு மாவட்டக் கழக செயலாளரும், அமைச்சருமான சு.முத்துசாமி முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர். நிகழ்வில் மொடக்குறிச்சி ஒன்றிய கழக செயலாளர்கள் சு.குணசேகரன், விஜயகுமார், குலவிளக்கு முத்துகுமார் ஆகியோர் உள்ளிட்ட பலர் உள்ளனர்.



நாமக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் திருச்செங்கோட்டில் நடைபெற்ற நாமக்கல் நாடாளுமன்றத் தொகுதி செயல்வீரர்கள் கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் தலைமை தாங்கி, கழகத் தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆட்சியில் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு திட்டங்களை விளக்கி சிறப்புரையாற்றி, நாமக்கல் நாடாளுமன்றத் தொகுதி தி.மு.க. கூட்டணியின் கொ.ம.தே.க. வேட்பாளர் வி.எஸ்.மாதேஸ்வரனை அறிமுகம் செய்து வைத்து பிரச்சாரம் மேற்கொண்டார். இக்கூட்டத்தில் வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி பொதுச் செயலாளரும் திருச்செங்கோடு சட்டமன்ற உறுப்பினருமான ஈ.ஆர்.ஈஸ்வரன், சந்திரகுமார், நகர செயலாளர் கார்த்திகேயன், ஒன்றியச் செயலாளர் வட்டூர் தங்கவேல் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் நிர்வாகிகள், இந்தியா கூட்டணி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், கழக முன்னோடிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



சேலம் நாடாளுமன்றத் தொகுதி தி.மு.க. வேட்பாளர். டி.எம்.செல்வ கணபதி 2வது நாளாக சேலம் வடக்கு சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்டபகுதியில் வாக்குகள் சேகரித்தார் உடன் சேலம் மத்திய மாவட்டக் கழக செயலாளர் இரா.இராஜேந்திரன் எம்.எல்.ஏ. மேயர். ஏ ராமச்சந்திரன், மாநகரச் செயலாளர். பா. ரகுபதி மற்றும் 'இந்தியா' கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் உள்ளனர்.



பெரம்பலூர் நாடாளுமன்றத் தொகுதி தி.மு.க.வேட்பாளர் கே.என். அருண் நேரு, தேர்தல் நடத்தும் அலுவலர் மாவட்ட ஆட்சித்தலைவர் க.கற்பகத்திடம் வேட்பு மனுத் தாக்கல் செய்தார். பெரம்பலூர் நாடாளுமன்றத் தொகுதி தி.மு.க.வேட்பாளர் கே.என்.அருண் நேரு, பெரம்பலூர் மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலரும் மாவட்ட ஆட்சித்தலைவருமான க.கற்பகத்திடம் வேட்பு மனுத் தாக்கல் செய்தார். பெரம்பலூர் மாவட்டக் கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், திருச்சி வடக்கு மாவட்டச் செயலாளர் ந.தியாகராஜன், பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் எம். பிரபாகரன் ஆகியோர் உள்ளனர்.




கரூர் மாவட்டம் அரவக்குறிச்சி சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட கழக பாக முகவர்கள் மற்றும் வாக்குச்சாவடி ஒருங்கிணைப்பாளர்கள் ஆலோசனை கூட்டம் கரூர் மாவட்டக் கழக செயலாளர் வி.செந்தில் பாலாஜி ஆலோசனைப்படி நடைபெற்றது. கரூர் மாவட்டக் கழகத் தேர்தல் பொறுப்பாளர் மாநிலங்களவை உறுப்பினர் எம்.எம்.அப்துல்லா, அரவக்குறிச்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மொஞ்சனூர் ஆர்.இளங்கோ சிறப்புரையாற்றினர். 'இந்தியா' கூட்டணி சார்பில் கரூர் மக்களவைத் தொகுதியில் போட்டியிடும் காங்கிரஸ் வேட்பாளர் ஜோதிமணியை ஆதரித்து தேர்தல் பணிகள் மேற்கொள்வது குறித்து ஆலோசனை நடத்தப்பட்டது.



சேலம் மேற்கு மாவட்டம் – கொளத்தூர் ஒன்றியத்தில் ஒன்றியச் செயலாளர் மிதுன் சக்கரவர்த்தி தலைமையில் நடைபெற்ற பாக முகவர்கள் கலந்தாய்வுக் கூட்டத்தில் ஆதி திராவிடர் நலக் குழு இணைச் செயலாளர் திப்பம்பட்டி ஆறுச்சாமி கலந்துகொண்டு பேசினார். இதில் பேரூர் செயலாளர் நடராஜ் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

# தேனி நாடாளுமன்றத் தொகுதியில் கொளுத்தும் வெயிலில்

# அமைச்சர் உதயநிதி ஸ்டாலினின் உரை கேட்கத் திரண்ட மக்கள் வெள்ளம்!















கழக இளைஞர் அணிச் செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள், சுட்டெரித்த வெயிலில், இந்தியா கூட்டணியின் தேனி தொகுதி கழக வேட்பாளர் தங்க தமிழ்ச்செல்வனுக்கு – தேனி நாடாளுமன்றத் தொகுதிக்கு உட்பட்ட உசிலம்பட்டி, ஆண்டிப்பட்டி, தேனி, பெரியகுளம் ஆகிய இடங்களில் திரண்டிருந்த பல்லாயிரவர் மத்தியில், கழக அரசின் சாதனைகளை எடுத்துரைத்து, வாக்குகள் சேகரித்து உரையாற்றிய காட்சிகள்!

## திராவிட இயக்க இதழ்கள் - தென்னகத் தலைவன்!



திராவிட இயக்க எழுத்தாளர்களில் ஒருவரான தினகரன் எனும் ‘கயல்’ தினகரன் அவர்களால் 1962- இல் தொடங்கி நடத்தப்பட்ட இதழ், ‘தென்னகத் தலைவன்’. அதற்கு அவர்தான் ஆசிரியராக இருந்தார்.

‘தி.மு.கழக வார ஏடு’ என்ற அறிவிப்புடன் வெளிவந்த இந்த இதழின் முதல் இதழை, பேரறிஞர் அண்ணா அவர்கள் வெளியிட்டார்.

இந்த இதழுக்குத் தனியே அட்டைப் படம் இல்லை. இதழின் முகப்பிலேயே கட்டுரைகள் பிரசுரமாகி இருக்கின்றன. இதழின் தலைப்பில் அண்ணாவின் கோட்டோவியம் அமைந்திருந்தது. மேலும், ‘தம்பி! உள்ள உயிர் ஒன்றுதான். அது போகப் போவதும் ஒரு தடவைதான். அது விடுதலைப் பணிக்குப் போவதிலேதான் நான் பெருமைப்படுகிறேன்’ என்ற அண்ணாவின் கூற்று இடம்பெற்றுள்ளது. திராவிட இயக்கச் சிந்தனைகளைப் பறைசாற்றும் படைப்புகள், தலையங்கம், இலக்கியக் கட்டுரைகள், வெண்பா போட்டி, கேள்வி பதில் உள்ளிட்ட பல விஷயங்களைத் தாங்கி வந்தது இந்த இதழ்.

இந்த இதழைத்தான் பின்னாளில், கே.ஏ.மதியழகன் அவர்கள் பெற்று, முதலில் வார ஏடாகவும், பிறகு நாளேடாகவும் நடத்தினார்.

## ஃப்ளாஷ்பேக்



எஸ்.ராஜேந்திரன்



### விருந்தினர் விடுதி சந்திப்பு!

1995 -ஆம் ஆண்டு கழக இளைஞர் அணிச் செயலாளராக இருந்த அண்ணன் தளபதி அவர்கள், அரியலூர் மாவட்டத்திற்கு கழக கொடியேற்றும் நிகழ்வுக்காக வருகை தந்திருந்தார். அப்போது நான் ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளராக இருந்தேன். அ.தி.மு.க.வின் சர்வாதிகார ஆட்சியை விமர்சித்துப் பொதுக்கூட்டத்தில் அவர் உரையாற்றினார். இந்தக் கூட்டத்துக்கு முன் விருத்தாசலத்தில் உள்ள விருந்தினர் விடுதியில் தளபதி தங்கி இருந்த போது, அவரைச் சந்தித்து எடுத்துக்கொண்ட புகைப்படம் இது.

**–எஸ்.ராஜேந்திரன்,**
**கை.களத்தூர் கிளைச் செயலாளர்,**
**பெரம்பலூர் மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### அணிகள் உதயம்!

1980-ஆம் ஆண்டு, ஆகஸ்ட் 2-ஆம் தேதி திருச்சியில் கலைஞர் தலைமையில் கழகத்தின் பொதுக்குழுக் கூட்டம் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில், தி.மு.க சட்டத் திட்ட விதிகள் பிரிவு -9 ஐ திருத்தம் செய்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதன்படி, கழகத்தின் தொண்டர் அணி, இளைஞர் அணி, மகளிர் அணி, மாணவர் அணி, தொழிலாளர் அணி, விவசாயிகள் அணி, இலக்கிய அணி ஆகியவை முறைப்படி அமைக்கப்பட்டன.

## முதன் முதலில் 4

**ந.வினோத்குமார்**

திராவிட இயக்க அடையாளங்களை, நடைமுறைகளைப் பற்றி விளக்கும் ‘திராவிட மரபு’ தொடர் இது...









# மாநாடுகளும் குடும்பங்களும்!

*‘தமிழ்நாட்டைப் பொறுத்தவரை, கட்சி மாநாடு என்றாலே அது திராவிட முன்னேற்றக் கழகம் நடத்துகின்ற மாநாடுதான். மற்றவை எல்லாம் பஞ்சாயத்துக் கூட்டம்’ என்று சொல்லும் அளவுக்குத்தான். அளவிலும் கருத்திலும் மிகப் பிரமாண்டமானவை, நம் கழகம் நடத்தும் மாநாடுகளே.*

*தி.மு.க. நடத்திய முதல் மாநாடு, திருச்சியில் நடைபெற்றது. அது மாவட்ட மாநாடு. அந்த மாநாடே மாநில மாநாட்டுக்கு இணையான பிரமாண்டத்தோடு நடைபெற்றது. அது குறித்து, பேரறிஞர் அண்ணா அவர்கள் எழுதியிருக்கும் இந்தச் சித்திரத்தைப் பாருங்கள்...*

**“மாவட்ட மாநாட்டுக்கான கொட்டகை அமைக்கப்பட்டுவிட்டது. மறுநாள் மாநாடு. முன்னாள் மாலை சென்று பார்க்கிறேன். பசியுடன் உள்ள பெரும்புலி தன் அகன்ற வாயைத் திறந்து கொண்டிருப்பது போல, கொட்டகை காட்சி அளிக்கிறது.**

**“சாம்பு”**

**“என்னண்ணா?”**

**“பந்தல்... கொட்டகை”**

**“அவசரத்தில் போட்டது. இவ்வளவுதான் முடிந்தது”**

**“இவ்வளவுதான் முடிந்ததா? என்ன விளையாடுகிறாய்? இவ்வளவு பெரிய கொட்டகையை ஏன் போட்டாய்? யார் போட சொன்னது? இவ்வளவு பெரிய கொட்டகைக்கு ஆட்கள் எங்கிருந்து கொண்டு வந்து குவிப்பது? நாளைக்கு இதிலே கால் பகுதிக்குக் கூட தோழர்கள் வருவார்களோ இல்லையோ? இவ்வளவும் நாளைக்கு காலியாக இருக்குமே! எப்படி அந்த அவமானத்தைத் தாங்குவது! என்ன வம்பு செய்துவிட்டாய் சாம்பு?”**

*ஆனால், அண்ணா பயந்தது போல் நடக்கவில்லை. மாறாக, மாநாட்டுப் பந்தலுக்கு அடங்காமல் கூட்டம் குவிந்தது. அந்த முதல் மாவட்ட மாநாடு மட்டுமல்ல, அதற்குப் பிறகு கழகம் நடத்திய ஒவ்வொரு மாநாட்டிலும் கூட்டம் அலைகடலெனத் திரண்டு கொண்டே இருக்கிறது. அதன் சமீபத்திய அலையைத்தான் இளைஞர் அணி இரண்டாவது மாநாட்டில் நாம் பார்த்தோம்.*

*இந்த மாநாடுகள் அனைத்திலும் ‘உடன்பிறப்புகள்’ தங்கள் குடும்பங்களுடன் கலந்துகொண்டனர். முன்பெல்லாம், மூன்று நான்கு நாட்களுக்கு மாநாடுகள் நடக்கும். அப்போதெல்லாம், ஒரு பக்கம் தாய்மார்கள் தங்கள் குழந்தைகளைத் தொட்டில் கட்டி தூங்க வைக்க, இன்னொருப் பக்கம் விடிய விடிய உணவு தயாராக, வேறொரு பக்கம், மாநாட்டு உரைகள் குறித்து விவாதங்கள் களைகட்ட, அந்த மாநாடுகளில் புதிய நண்பர்கள் கிடைத்து, தங்கள் வீட்டுப் பிள்ளைகளுக்கு வரன் கிடைத்து, பிறகு உறவாகி என எத்தனையோ குடும்பங்கள் கழகக் குடும்பங்களாகி இருக்கின்றன.*

*காலமும் சூழலும் மாறி வரும் இந்த நாட்களில், மாநாடுகள் நடைபெறும் நாட்கள் குறைந்திருக்கலாமே தவிர, மாநாட்டுக்கு வரும் குடும்பங்களின் எண்ணிக்கை குறையவில்லை. ஆமாம்... தி.மு.க. என்பது குடும்பங்களின் கட்சிதான்! அரசியல் மாநாடுகள் என்றால், அதில் கட்சிக்காரத் தொண்டர்கள் மட்டும்தான் கலந்துகொள்வார்கள் என்ற நிலையை மாற்றி, அவற்றைக் குடும்ப நிகழ்வுகளாக மாற்றியது என்கிற விதத்தில், கழகத்தை வீடுகளுக்குள் எடுத்துச் சென்ற அந்த மரபைத் தொடங்கியது தி.மு.க.தான்!*

...அடையாளம் அறிவோம்.

## பாசறை படிப்பறை


**கௌதம் ராஜ்** 4

“புத்தகத்தில் உலகைப் படிப்போம், உலகத்தையே புத்தகமாய்ப் படிப்போம்” என்றார் முத்தமிழறிஞர் கலைஞர். அப்படி சுயமரியாதை-சமத்துவம்-சமூக நீதி நிரம்பிய உலகைப் படிக்க, படைக்க அவசியமான புத்தகங்களை வாரந்தோறும் அறிமுகம் செய்கிறது இந்தப் பகுதி...

# தீட்டாயிடுத்தா?

*கர்நாடக சங்கீதம் என்றாலே, ஒரு குறிப்பிட்ட சமூகத்தினர்தான் நினைவுக்கு வருவார்கள். அத்தகைய கர்நாடக சங்கீதத்துக்கு மெருகூட்டும் இசைக் கருவிகள், பல்வேறு சமூகத்தினரின் பங்களிப்போடு தயாரிக்கப்படுபவை. கர்நாடக சங்கீதத்தில் வீணை, வயலின், புல்லாங்குழல், நாதஸ்வரம், கடம் என பல்வேறு வாத்தியங்கள் இருந்தாலும், மிருதங்கம் தனிச்சிறப்புடையது. காரணம், அது தோல் வாத்தியம். மாட்டுத்தோல், ஆட்டுத்தோல் என இதன் மூலப்பொருட்கள் அனைத்தும் பார்ப்பனர்களால் தீண்டப்படாத பொருட்கள்.*

*மிருதங்கம் தயாரிப்பவர்கள் பெரும்பாலும் தலித் சமூகத்தைச் சேர்ந்தவர்களாகவே இருக்கிறார்கள். பின்னாளில் இவர்கள் காலனிய ஆதிக்கத்தின் காரணமாகவும், சாதிய ஒடுக்குமுறையின் காரணமாகவும் கிறிஸ்துவ மதத்துக்கு மாறினார்கள். அதில் ஒருவர்தான் செபாஸ்ட்டியன். அவரது குடும்பம் தஞ்சாவூரைப் பின்புலமாகக் கொண்டது. பின்னாளில் அவரது குடும்பம், மிருதங்கத் தயாரிப்பு சாம்ராஜ்ஜியமாக உருமாறியதால், இந்நூலின் பெயரும், SEBASTIAN & SONS: A BRIEF HISTORY OF MRDANGAM MAKERS என்றே அமைந்துள்ளது.*





*மிருதங்கம் தயாரிப்பவருக்கும்-வாசிப்பவருக்கும் இடையே இருந்த சாதிய முரண்பாடுகளை, பிற்காலத்தில் நகரமயமாதலாலும், நவீன மயத்தின் காரணமாகவும் அது எவ்வாறு மாற்றம் அடைந்தது என்பதையும் செபாஸ்ட்டியன் குடும்பத்தின் கதையோடு பிணைத்துள்ளார் நூலாசிரியர் ‘சங்கீத கலாநிதி’ டி.எம். கிருஷ்ணா. இந்த உற்பத்தி உறவு முறையில் பெரியார் கண்ட திராவிட இயக்கத்தின் தாக்கத்தையும் அவர் ஓர் இடத்தில் பதிவுசெய்கிறார்.*

*மிருதங்கத்தின் தயாரிப்பு முறை மிகவும் கடினமானது. மனித உழைப்பை உறிஞ்சி எடுக்கக் கூடியது. அதே சமயத்தில் கலை வேலைப்பாடுகளால் ஆனது. தரமான பலா மரக் கட்டைகளைச் சேகரித்தல், மாட்டுத்தோல் மற்றும் ஆட்டுத்தோல் பதப்படுத்தல், அவற்றை தோல் கயிற்றின் மூலம் இணைத்தல், பிறகு சத்தத்துக்கு ஏற்ப முறைப்படுத்துதல் எனச் சிக்கலான தயாரிப்பு முறையை வேண்டி நிற்கும் வாத்தியம் மிருதங்கம். இதைப் பற்றி மிக விரிவாகவும், களஆய்வுகளுடனும், துறைசார் நிபுணர்களுடைய நேர்காணல் களுடனும் இந்நூலில் கிருஷ்ணா பதிவு செய்துள்ளார்.*

*இந்நூலின் மூலம் மிருதங்கம் தயாரிக்கும் குடும்பங்களின் வரலாறும், அவர்கள் இந்தத் தொழிலில் அடைந்த சரிவுகளும், அவற்றிலிருந்து கற்ற பாடங்களும் அதேநேரத்தில் கர்நாடக சங்கீதத்தில் இருந்து இவர்கள் விலக்கி வைக்கப்பட்டுள்ளதையும் அறியலாம். குறிப்பாக, மிருதங்கம் தயாரிக்கும் தலித் கிறித்துவர்களின் வாழ்க்கைத் தரம் சாதி என்ற ஒற்றைக் காரணத்தால் பெரிய அளவில் பொருளாதார ரீதியில் மேன்மை பெறவில்லை.*

*‘மிருதங்க வித்வான்’ என கொடுக்கப்படும் அங்கீகாரம் அதனை வடிவமைக்கும் தயாரிப்பாளனுக்குக் கொடுக்கப்படுவதில்லை என்பதை வருத்தமாகப் பதிவு செய்கிறார் நூல் ஆசிரியர் டி.எம். கிருஷ்ணா. பிறப்பால் ஒரு பிராமணரான டி.எம்.கிருஷ்ணா, சொந்த சமூகத்தை விமர்சனபூர்வமாகவும் அணுகியுள்ளார். அவர் கொண்டுள்ள இந்தப் பக்குவம்தான் சாதி-மத ஆதிக்க சக்திகளால் அவர் எதிர்க்கப்படுவதற்கும் காரணமாக இருக்கிறது. இந்த நூல் காலச்சுவடு பதிப்பகத்தால் ‘செபாஸ்டியன் குடும்பக் கலை’ என்ற தலைப்பில் தமிழிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.*

**பிறப்பால் ஒரு பிராமணரான டி.எம்.கிருஷ்ணா, சொந்த சமூகத்தை விமர்சனபூர்வமாகவும் அணுகியுள்ளார்.**


*பெரியாரைப் பற்றி கிருஷ்ணா பாடியதால் ‘கர்நாடக சங்கீதத்தின் புனிதம் கெட்டுவிட்டது’ என்று சொல்பவர்கள், மிருகத் தோலால் செய்யப்படும் மிருதங்கத்தை வாசிப்பதால், கர்நாடக சங்கீதம் தீட்டாகிவிட்டதா என்பதையும் சொல்ல வேண்டும். சொல்வார்களா..?*

,,,வாசிப்போம்.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

429

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்





-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131